மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

ர் 3 | 1 - 10 - 54 | இதழ் 1

மதத்தை மதம்
மாய்க்க

பழங் கடவுளைப் புதிய சிலுவை
அகற்ற

ஆதிக்கக்காரன் அடிமையை
அடக்குகிறான்

நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

முதல் நாடக முயற்சி

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு பொதுவாழ்க்கையில் இறங்கிய பிறகும், நாடகத்தில் நடிக்கவேண்டும் என்ற ஆர்வம், அவரது உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது.

கற்றறிவில்லார் கையில் சிக்கிப் பிற்போக்குத் தன்மையில் போய்க்கொண்டிருந்த நாடக உலகைக், கற்றறிவாளர் கைக்கு மாற்றி, நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் அதனால் பலன் ஏற்படும்படி செய்ய வேண்டும் என்பது, அறிஞர் அண்ணாவின் ஆவல். அதற்கான வாய்ப்பும் வசதியும் அவர்களுக்கு நீண்டநாட்கள் ஏற்படாமலே யிருந்தன.

காஞ்சிபுரத்தில் தம் சொந்த முயற்சியில் "திராவிடநாடு" வார இதழ்த் தொடங்கி நடத்திக்கொண்டு வரும்போது, அறிஞர் அண்ணாவின் உள்ளத்தில் வேரூன்றி இருந்த கருத்து, செழித்து வளர்ந்து, பூத்துக், காய்த்துக், கனியத்தொடங்கிற்று. அதன் விளைவாக "சந்திரோதயம்" என்னும் நாடகம் உயிர்ப்பெற்று எழுந்தது. அதில் அறிஞர் அண்ணாவும், இயக்கத் தோழர்களும், "திராவிடநாடு" அலுவலகத்தில் பணியாற்றிவந்தோரும் பங்கு ஏற்று நடிப்பது என்னும் முயற்சி உருப்பெற்றது. நாடகம் சரியாக இருக்குமா இருக்காதா என்ற ஐயப்பாடும், அதனை முதலில் எங்கு நடத்திக்காட்டுவது என்ற அச்சமும் அண்ணாவுக்கு ஏற்பட்டன. ஐயப்பாட்டையும், அச்சத்தையும் போக்கிக்கொள்ள, வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவத்திபுரத்தில், அந்த நாடகத்தை நடத்திப்பார்ப்பது என்னும் முடிவில், 1943-ம் ஆண்டில், முதல் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. நாடகம் யாவரும் போற்றிப் புகழும் வண்ணம் அமைந்ததோடு, அறிஞர் அண்ணா நடிப்பிலும் மிகச்சிறந்து விளங்குபவர் என்னும் உண்மையும் வெளிப்பட்டது. அண்ணா அவர்கள், ஆண்டி, அப்துல்லா, துரைராஜ், தொழிலாளி, மடாதிபதி, ஜமீன்தார் ஆகிய வேடங்களைத் தாங்கி, மிகத்திறம்பட நடித்து, மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டார். பிறகு அந்த நாடகம் தமிழ்நாடெங்கும் நடித்துக்காட்டப்பட்டது.

"சந்திரோதயம்" நாடக உலகில் ஒரு புரட்சியையும், மறுமலர்ச்சியையும் உண்டாக்கிற்று என்னலாம். "சந்திரோதயம்" நாடகத்தைக் கண்ட பிறகு புதுப்புது சீர்திருத்த நாடகங்கள் தோன்றின; சீர்திருத்த நாடகாசிரியர்களும், சீர்திருத்த நடிகர்களும் கிளம்பினர். பெரும்பாலான நாடகக் கம்பெனிகள் புராண நாடகங்களைக் கைவிட்டுச், சீர்திருத்த நாடகங்களையே நடித்துக்காட்ட ஆரம்பித்தன. இதற்கெல்லாம் காரணம் "சந்திரோதயம்" என்றால் அது மிகையாகாது.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

1 - 10 - 54 வெள்ளிக்கிழமை

சூதுத் திட்டம்

திருவிதாங்கூர் - கொச்சித் தமிழ்ப் பகுதியில் வாழும் தமிழர்கள், அனலிலிட்ட புழுப்போல், உயிர்வாழ்க்கைக்கு மன்றாடித் துடிதுடிக்க வேண்டிய வேதனை நிலைக்குத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். திரு-கொச்சி ஆட்சியை அனலாக்கி, அங்கு வாழும் தமிழர்களைப் புழுக்களாக்கி, அனலைப் புழுக்கள்மீது வீசச்செய்து, அவை துள்ளிக் குதித்து வேதனைப்படுவதை வேடிக்கைக்காட்சியாக்கி அகமகிழ்ந்துகொண்டிருக்கிறது டில்லி ஆட்சிப்பீடம்!

திரு - கொச்சித் தமிழர்கள் தாங்கள் மொழி வழி பெறவேண்டிய உரிமைகளையெல்லாம் பெற்றுத், தாய்த் தமிழகத்தோடு இணைந்து நின்று, அடையவேண்டிய பலனையும், நுகர வேண்டிய இன்பத்தையும் எய்தி வாழ்வதற்காகப் பல்வேறு வகைகளிலும், பல்வேறு வழிகளிலும் தங்கள் உரிமைக்குரலை எழுப்பிவந்திருக்கிறார்கள். மூன்று தேர்தல்களின் மூலமும், தாங்கள் தாய்த் தமிழகத்தோடு சேர விரும்புபவர்களே என்பதை உறுதிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். ஜனநாயக முறைப்படி மக்களின் எண்ணத்தை அறிய வேறு சான்று எதுவும் தேவையில்லை. இந்திய துணைக்கண்டத்தைச் சார்ந்த மாநில அமைப்புகளின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் இந்தியப் பேரரசு, மேற்கண்ட உண்மையை நேர்மையான முறையில் உணர்ந்திருக்குமேயானால், திரு - கொச்சித் தமிழர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் எள்ளவும் ஏற்பட்டிருக்கா. தமிழர்கள் எவ்வளவோ நிம்மதியாகத் தாய்த் தமிழகத்தில் வாழ்ந்திருப்பார்கள் ; மலையாளிகளும் தமிழர்க்குத் தொல்லைகள் கொடுக்கும் எண்ணமில்லாமல்—அதற்கான வகையில்லாமல் மலையாளப் பகுதியை மட்டும் தங்கள் தாயகமாகக் கொண்டு வாழத் தலைப்பட்டிருப்பார்கள். "மதராஸ் மனதே" என்று ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த ஆந்திரர், சென்னை ஆந்திரர்களுக்குச் சேராது, ஆந்திர மாகாணத்தை மட்டுந்தான் அவர்கள் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என்று நேரு அரசாங்கம் கூறியவுடன் எப்படி அடங்கினார்களோ, அப்படியே, திரு - கொச்சியிலுள்ள தமிழ்ப்பகுதி கேரளத்தோடு சேராது, அது தமிழகத்தோடுதான் சேரும் என்று நேரு அரசாங்கம் நீதி அடிப்படையில் பிரிவினை செய்திருக்குமேயானால், மலையாளிகளும் அடங்கிப்போயிருப்பார்கள். நேருவின் தயவு இருக்கும் வரையில் ஆதிக்கம் செலுத்திப் பார்ப்போம் என்ற முறையில் அவர்களெல்லாம் அட்டகாசம் செய்து பார்க்கிறார்கள்.

வலிவுடைய புலியின் முன் ஆட்டைக் கொண்டுபோய் நிறுத்துவதைப்போல், பெரும்பான்மை வலிவும் பேராசை மனப்பான்மையும் கொண்ட மலையாளிகளின் ஆட்சியின்கீழ், சிறுபான்மையான வலிவற்ற தமிழர்களை நிறுத்தியிருக்கிறார் பண்டித நேரு. சென்னை அரசாங்கம் நேருவிடத்தில் தன் விருப்பத்தை வற்புறுத்தும் துணிவற்றதாக இருக்கிறது; திரு-கொச்சி அரசாங்கம் நேருவின் தயவால் எதையும் செய்யத் துணிவுகொண்டதாக இருக்கிறது. இந்த நிலையில் பட்டம்தாணுவின் அரசாங்கம் 5000-க்கு மேற்பட்ட மலையாளக் குடும்பங்களைத் தமிழ்ப்பகுதிகளில் குடியேற்றும் சூதுத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. இந்த முயற்சி 5,000; 10,000; 25,000; 50,000 என்று மேற்கொண்டு போய்க்கொண்டேயிருந்தாலும் இருக்கும். தமிழ்ப்பகுதிகளை மலையாளப் பகுதியாக்கும் சூதுத்திட்டம் போடப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் கேட்கப்புகின் இலங்கையிலிருந்து வரும் மலையாளிகளைக் குடியேற்றப் போகிறேன் என்று பட்டம் தாணு கூறினாலும் கூறுவார். இந்தச் சூதுத்திட்டம் நிறைவேறாத வகையில், திரு - கொச்சித் தமிழ்ப்பகுதியைத் தமிழகத்தோடு இணைக்கும் பணியினை நேரு சர்க்காரும், காமராஜ சர்க்காரும் உடனடியாகச் செய்ய முற்படவேண்டும். இல்லையேல், பல விபரீத விளைவுகள் ஏற்படும் அளவுக்கு, நிலைமையை வளர்த்துவிட்ட குற்றம் நேரு சர்க்கார், காமராஜ சர்க்கார் ஆகிய இருவரையும் சாரும் என்பதுமட்டும் உறுதி!

கருத்துக் கதிர்

புதிய வாக்குரிமைச்சீட்டு முறை

இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாவட்டாண்மைக் கழக (ஜில்லாபோர்டு)த் தேர்தலில், சென்னை அரசியலார், வாக்குரிமைச் சீட்டை அளிக்கும் முறையில் புதிய முறையைக் கையாண்டிருக்கின்றனர் என்பதைப் பலரும் நன்கு அறிவர். புதிய முறையை ஏன் கொண்டுவந்தார்கள், அதனால் எதிர்பார்க்கப் பட்ட புதிய பயன் என்ன, முன்னைய முறையில் இருந்த தொல்லை என்ன, புதியமுறையில் அது எப்படிக் களையப்பட்டிருக்கிறது என்பன போன்ற ஐயவினாக்களுக்கு அரசியலார் இது வரையில் காரணம் சொல்லவே இல்லை. நூற்றுக்கு எண்பத்தி மூன்றுபேர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருக்கும் இந்நாட்டில், புதிய முறை, போன பொதுத் தேர்தலில் கையாண்ட முறையைக்காட்டிலும் எளிதானது, எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடியது என்றிருக்குமேயானால் பலரும் போற்றி வரவேற்றிருப்பவர் என்பதில் ஐயமில்லை.

ஆனால் இதுவரையில் நடந்தேறிவந்துள்ள மாவட்டாண்மைக் கழகங்களின் தேர்தல்களைக் கூர்ந்து கவனிக்கும்போது, நாமெல்லாம் திடுக்கிடக்கூடிய வகையில், செல்லுபடியாகாத வாக்குரிமைச் சீட்டுகளின் எண்ணிக்கை, மொத்தச் சீட்டுகளில் 100-க்கு 25, 30, 40, 50 என்ற விகிதத்தில் ஆங்காங்கு அமைந்திருக்கின்றது.

இப்படிப்பட்ட தோல்வியுறும் ஒரு முறையை அரசியலார் ஏன் புகுத்தினார்கள்? இன்றைய அரசியலார் எந்த ஒரு செயலுக்காவது இது வரையில் காரணம் சொல்லியிருந்தாலல்லவா, இதற்கும் சொல்லுவார்கள் என்று நாம் எதிர் பார்க்கமுடியும்! எப்படியேனும் காங்கிரஸ் கட்சி தேர்தலில் வெற்றிபெறுவதற்கு வழியுண்டா என்பதற்காக ஏதேதோ தில்லுமுல்லு செய்ய இன்றைய ஆளவந்தார்கள் முயலுகிறார்களேயொழிய, ஜனநாயகப் பண்பை நேர்மையாக—நீதியாக—ஒழுங்காக—உயர்வாக நிலை நாட்டவேண்டும் என்பதில் அவர்களுக்குச் சிறிதும் அக்கரையில்லை. போன பொதுத்தேர்தலில் கையாண்ட பெட்டி பார்த்துப்போடும் முறையைவிட, இப்பொழுதுள்ள சீட்டைப் பார்த்துக் கோடிட்டுப் போடும் முறை எந்த வகையில் எளிதானது? ஆளும் ஆட்சியினர்க்கு ஜனநாயகத்தில் அக்கரையிருந்தால் இப்படிப்பட்டவொரு கடினமுறையைப் புகுத்தியிருப்பார்களா? எனவே அவர்களுக்கு ஜனநாயகத்தைவிட, தங்கள் கட்சி ஆதிக்கந்தான் பெரிது என்பதை இதன்மூலம் தெளிவாகப் புலப்படுத்திவிட்டார்கள்.

ஃ ஃ ஃ

புதிய வரிகள்

காங்கிரஸ் ஆட்சியில் ஒரே ஒரு 'உயர்வு' அடிக்கடி மக்களுக்கு அளிக்கப்படுகிறது! அது தான் வரி உயர்வு! காங்கிரஸ் ஆட்சியில் வேறு எந்த வகையில் வளர்ச்சி ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும், வரித்துறையில்மட்டும் ஆண்டு தோறும் வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டேயிருக்கிறது. இந்திய நிதிமந்திரியார் ரூ. 4½ கோடி வருமானத்தைப் புதிய வரிகள் சிலவற்றின் மூலம் எதிர்பார்க்கிறார். அதன்படி பென்சில், பழைய பத்திரிகை, க்ஷவரபிளேடுகள், வாக்கும் பிளாஸ்க் போன்ற பொருள்கள் புதிய வரிகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. வாழ்வதற்கான வசதியும், வருமானத்திற்கான வழியும் அற்ற நாட்டில், இப்பொழுதே வரிச்சுமை மக்களால் தாங்கமுடியாத அளவுக்குப் பளு ஏறியதாக இருந்துவருகிறது. இந்த நிலையில் புதிய வரிகள் வேறு போட்டால், நிலைமை என்னாகும்? வரிகள் பணக்காரர்களையும், முதலாளிகளையும் எந்தவகையிலும் பாதிப்பதில்லையே! எவ்வளவு வரிகள் போட்டாலும் அவர்கள் தங்கள் இலாபக் கணக்கைக் குறைத்துக்கொள்வதில்லையே! வரிகள் நடுத்தர வகுப்பு மக்களையும், ஏழை எளிய பாட்டாளி மக்களையும் மட்டுமே வாட்டி வதைக்கின்றன. காங்கிரஸ் ஆட்சியில் கண்ட பலன், பணக்காரன் மேலும் பணக்காரனாகிக் கொண்டே போகிறான்; ஏழை மேலும் ஏழையாகிக்கொண்டே போகிறான்! அவ்வளவுதான்!

ஃ ஃ ஃ

தெய்வபக்தி அவசியமாமே!

"நாட்டின் செழிப்புக்கும், மக்கள் நல்வாழ்வுக்கும் தெய்வபக்தி அவசியம். கடவுளை வழிபட பல்வேறு முறைகளை நம் முன்னோர்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். கடவுளுக்குப் பூசை செய்வதனால் ஒழுக்கமும் நற்குணமும் ஏற்படும்" என்று தோழர் ச. இராசகோபாலாச்சாரியார் சென்னை மூர்மார்க்கெட் ஸ்ரீகெங்கை விநாயகர் பக்தஜனசபையின் ஆதரவில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கூறியுள்ளார்.

மனிதன் தெய்வபக்தி உடையவனாக இருப்பதற்கும், தெய்வபக்தி அற்றவனாக இருப்பதற்கும் காரணம் அவனா? அல்லது ஆண்டவனா? "நன்றேசெய்வாய் பிழைசெய்வாய் நானோ அதற்கு நாயகம்" என்ற மாணிக்கவாசகர் கூற்றுக்கொப்ப, ஆண்டவன்தான் காரணமெனில், தெய்வபக்தி அற்றிருப்பவர்களைக்கண்டு யாரும் மனக்கசப்பு கொள்ளவேண்டிய அவசியமில்லை! ஏனெனில் அப்படி அவன் இருக்க வேண்டும் என்பது ஆண்டவன் எண்ணமாகும்! இல்லை, அவனவனேதான் காரணம் என்றால், செழிப்புக்கும், நல்வாழ்வுக்கும், ஒழுக்கத்திற்கும், நாணயத்திற்கும் ஏன் அவனே காரணமாகக்கூடாது? இதற்கு மட்டும் ஆண்டவன் தயவு ஏன்? பக்தியைக் கொள்வதற்கும் கொள்ளாததற்கும் அவனவனே காரணம் என்னும்போது, மற்றைய பண்புகளைப் பெறுவதற்கும் அவனே காரணமாக இருக்கமுடியுமே! பண்புகளைக் கொடுப்பதற்கு ஆண்டவன் காரணமாக இருக்க வேண்டிய அவசியமில்லையே!

நூற்றாண்டு நூற்றாண்டுக் காலமாக மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் தெய்வபக்தியுடையவர்களாகத்தான் இருந்து வந்திருக்கின்றார்கள். ஏற்பட்ட பலன் என்ன? தெய்வபக்தியால் எதிர்பார்க்கப்படும் பலன் ஏற்பட்டிருந்தால் நாட்டில் இவ்வளவு இழிநிலைகள் இருக்கவேண்டிய அவசியமில்லையே! அந்த நூறுபேர்களுடைய அறிவுதான் பலனளித்து வருகிறதே யொழிய, பக்தி சாதித்ததென்ன? "கடவுளுக்குப் பூசை செய்வதனால் ஒழுக்கமும், நற்குணமும் ஏற்படும்" என்று ஆச்சாரியார் கூறுகிறார். பூசை செய்பவர்களெல்லாம் ஒழுக்க—நற்குணசீலர்களா? என்றும், பூசை செய்யாதவர்களெல்லாம் ஒழுக்கம்—நற்குணம் அற்றவர்களா? என்றும் ஆச்சாரியாரைக் கேட்கிறோம். இந்த அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால் ஆச்சாரியார் கூற்று எவ்வளவு அபத்தமானது என்பது விளங்கும்.

ஃ ஃ ஃ

இலங்கை ஆட்சி இழைக்கும் கொடுமை

இலங்கையில் வாழும் இந்தியர்கள் குறிப்பாகத் தென்னாட்டவர்கள் பிரச்சினை நாளுக்கு நாள் பயங்கரமான நெருக்கடிக்குத் தள்ளப்பட்டு வருகிறது. இலங்கையை வளமாக்கும் பணியில் தங்கள் உழைப்பையெல்லாம் கொடுத்துவந்த தொழிலாளர்களை, காரியம் ஆன பிறகு தென்னாட்டிற்குத் துரத்தியடிக்கப்படுகிறார்கள் என்றால் இலங்கை ஆட்சி இழைக்கும் கொடுமையினை ஒருவாறு உணரலாகும். சுரண்டும் நோக்கோடு சென்று சுரண்டுபவர்களை அந்நாடு வெளியேற்ற முனைகிறது என்றால், அதில் வேண்டுமானால் நியாயம் இருக்கமுடியும்; ஆனால் உழைத்துப் பிழைக்கச் சென்று, பல ஆண்டுகள் அங்கேயே கழித்தவர்களை வெளியேற்ற முனைவது கொடுமையிலும் கொடுமையாகும். அவர்களையெல்லாம் அந்நாட்டுக்குரிய மக்களாக ஏற்றுக்கொள்வதுதான் நீதியாகும். அந்த நீதியை அடியோடு அழிக்கத் துணிந்துள்ளது கொத்தலாவாலா அரசாங்கம். இலங்கையில் காலாவதியான வாச பர்மிட் வைத்திருக்கும் 70,000 தென்னாட்டவர்களை மட்டுமின்றி, இந்திய ஹைகமிஷனர் வழங்கியுள்ள பர்மிட் வைத்திருக்கும் 1½ லட்சம் தென்னாட்டவர்கள் அனைவரையும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப இலங்கை அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாக இலங்கை முதலமைச்சர் சர். ஜான் கொத்தலாவாலா தெரிவித்துள்ளார். தென்னாட்டவர்க்கு ஏற்பட்டிருக்கும் இந்த அவலநிலையைப் போக்குவதிலே இந்திய அரசாங்கம் சிறிதும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இலங்கையில் வாழும் தென்னாட்டவர்க்கு, அவதிகள், நாளுக்கு நாள் அடுக்கிக்கொண்டு போவதற்கு அங்கு இந்தியத் தூதுவராக இருந்துவரும் தேசாய் என்பவரேயாவார் என்று அங்குள்ள தமிழர்கள்—தென்னாட்டவர்கள் கருதுகிறார்கள். அங்கு திறமைவாய்ந்த ஒரு தென்னாட்டவர் தூதுவராக இருந்திருப்பாரேயானால், இத்தகைய அவதிகள் ஏற்பட்

டிருக்குமா? தென்னாடு வடநாட்டவர்கையில் சிக்குண்டு சீரழிவதற்கு இதுவும் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். தென்னாட்டவர்க்கு இலங்கை ஆட்சியினர் இழைக்கும் கொடுமையினை அகற்ற சென்னை அரசாங்கமும் தென்னாட்டிலுள்ள சர்வகட்சிகளும் பாடுபட முன்வருமாக! இந்தியப் பேரரசை வற்புறுத்தும் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாக!

ஃ ஃ ஃ

திருமண விலக்கு விதி

மணமான ஆணும் பெண்ணும் ஒன்றுபட்ட சம்மதத்தின்பேரில் திருமண விலக்கு செய்து கொள்ளலாம் என்று அனுமதி அளிக்கும் விதி ஒன்று, விசேஷ விவாக மசோதாவில் இடம் பெறச் செய்திருப்பது, போற்றி வரவேற்க வேண்டியதாகும். பண்டித நேரு இதற்கு முழு ஆதரவுதந்து பாராளுமன்றத்தில் பேசியிருப்பதும் வரவேற்கத்தக்கதாகும். திருமண விலக்குச் செய்துகொள்ள விரும்பும் ஆணும் பெண்ணும், தங்கள் ஒன்றுபட்ட கருத்தைத் தெரிவித்து, ஓராண்டுகாலம் பொறுத்திருந்து, அதற்குள் மாற்றம் ஏதும் ஏற்படாமல்போனால், ஓராண்டு காலத்திற்குப்பின் திருமண விலக்குச் செய்துகொள்ளலாம் என்று ஏற்படுத்தியிருப்பதும் வரவேற்கத்தக்கதாகும். வைதீக மனப்பான்மை கொண்டவர்கள் இதனை எதிர்க்கக்கூடும். திருமணம் செய்துகொண்ட மணமக்கள், ஏதோவொரு நீங்காக் காரணம்பற்றிப் பிணக்குகொண்டு, இருவரும், குறிப்பாகப் பெண், இறந்துபடும் காலம் வரையில் வேதனையில் மூழ்கிக்கிடப்பதைவிட, திருமணவிலக்கு செய்துகொண்டு இருவரும் தமது மனதுக்கு ஒத்தவகையில் தனித்தனி மறுமணம் செய்துகொண்டு வாழ்வது எவ்வளவோ மேல் அல்லவா? இந்த முறையில் சிலபல குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட சிலர் முற்படுவர். ஆனால் அவர்களுக்கெல்லாம் ஒன்றினைமட்டும் உறுதியாகக் கூறலாம், இன்றைக்கு நடைமுறையில் இருந்துவரும் முறையைக் காட்டிலும், திருமண விலக்கு செய்துகொள்ளும் முறை சமுதாய வாழ்க்கையை எவவளவோ சிறப்பாகவும், இன்பகரமாகவும் ஆக்கும் என்று. திருமண விலக்கை நடைமுறையில் கொண்டிருக்கும் பிற நாடுகளெல்லாம், வாழ்வின்பத்தைப் பெறுவதில் எவ்வளவோ முன்னணியில் நிற்கின்றனவேயொழிய, நமது நாட்டைப்போல் அவதியுறும் நிலையிலில்லையே!

ஃ ஃ ஃ

வடநாட்டு அகதிகள் புனர்வாழ்வு

பாக்கிஸ்தானிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட வடநாட்டு அகதிகளுக்கு இந்திய அரசாங்கம் இதுவரையில் ஏறத்தாழ ரூ. 240 கோடிக்கு மேல் செலவழித்திருக்கிறது. அது தவிர மாநில அரசுகள் பலகோடி ரூபாய்த் தனித்தனியாகச் செலவழித்திருக்கின்றன.

வடநாட்டோடு திராவிடம் இணைந்திருப்பதால் திராவிடத்திற்கு ஏற்படுகிற நஷ்டங்களில் இதுவும் ஒன்று. திராவிடம் தனித்து வாழ்ந்து வந்திருக்குமேயானால், இந்த அகதிகள் பற்றிய எத்தகைய பொறுப்பும் திராவிடத்திற்கு ஏற்பட்டிருக்காது. ரூ. 240 கோடியில் திராவிடத்தின் வரிப்பணமும் சேர்ந்திருக்காது. இப்பொழுது இலங்கையிலிருந்து வரும் பல இலட்சக்கணக்கான அகதிகளைத் திராவிடம் ஏற்றுக்கொள்ளவேண்டிய இன்றியமையாத நெருக்கடியில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கிறது. இந்தத் தென்னாட்டு அகதிகளைப்பற்றி மத்திய அரசாங்கம் சிறிதேனும் கவலைகொள்கிறதா என்றால், அதுதான் இல்லை. இந்த நிலையில் வடநாட்டோடு ஒட்டிக்கொண்டிருப்பதால் திராவிடத்திற்கு நஷ்டமேயொழிய இலாபம் இல்லை என்பதை உணரலாம்.

வடநாட்டு அகதிகளின் புனர் வாழ்வுக்காக மத்திய அரசாங்கம் மேற்கொண்டு தன் கையிலிருந்து ரூ. 85 கோடி நஷ்ட ஈடாக அவர்களுக்குத் தர எண்ணியிருக்கிறது. பாக்கிஸ்தான் அகதிகள் விட்டுச்சென்ற ரூ. 100 கோடி மதிப்புள்ள சொத்துக்களையும் கொடுத்து, மேற்கொண்டு ரூ. 85 கோடி தர இருக்கிறது. அந்த ரூ. 85 கோடியில் திராவிடத்தின் வரிப்பணமும் சேர்ந்திருக்கிறது. தென்னாட்டு அகதிகளைப்பற்றிக் கவனிக்க வகையில்லை; ஆனால் வடநாட்டு அகதிகளுக்கு எல்லா வசதிகளும் செயதுதரப்படுகின்றன. இந்த அவல நிலை இன்னும் எத்தனை காலத்திற்கு நீடிக்குமோ!

அட்டைப்பட விளக்கம் :

மதத்தை மதம் விழுங்குகிறது!

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததற்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் கூட்டம் கூட்டமாகப் போய்க் குடியேறத்தலைப்பட்டார்கள். அப்பொழுது அமெரிக்காவின் பல பகுதிகளிலும் நாகரிகமற்ற பழங்குடிமக்கள் வாழ்ந்துவந்தனர்.

அமெரிக்காவின் சில பகுதிகளில் மிக எளிதாகவும், சில பகுதிகளில் அங்குவாழ்ந்த பழங்குடி மக்களை கடுமையாக எதிர்த்துப் போரிட்டு அழித்தும் குடியேறவேண்டிய நிலை ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்டது. ஐரோப்பியர்கள் குடியேறியது மட்டுமல்லாமல், ஆங்காங்குள்ள பகுதிகளைப் பிடித்து, அவற்றில் ஆட்சி ஆதிக்கம் செலுத்தத்தொடங்கினர். அப்படி ஆதிக்கம்செலுத்தும் நிலையில் பழங்குடி மக்களின் மதம், கடவுள்கள் ஆகியவற்றை வலுவிக்க அழித்துத், தமது கிருத்துவ மதத்தைப் பரப்ப எல்லாவகையிலும் முயன்றனர்.

மெக்சிகோ நாட்டை வென்று தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்த கோர்டிஸ், அங்கு நிலவிவந்த ஆஸ்டிக் என்ற மதத்தினரின் கடவுள் சிலையை உடைத்துக் கீழேதள்ளி, அந்த இடத்தில் கிருத்துவ மதச்சின்னமான சிலுவையை நிலைநாட்டுவதைத்தான் படம் தெளிவுபடுத்துகிறது. மெக்ஸிகோ நாட்டு ஆஸ்டிக் மதத்தலைவன் தம்முடைய கடவுளை உடைக்கவேண்டாம் என்று எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுப்பார்க்கிறான்; அவனை அடக்கும் நிலையில் ஆதிக்கக்காரனான கோர்டிஸ் விளங்குகிறானேயொழிய, கிருத்துவ மதம் போதித்த அன்புநெறி அவனிடம் காணப்படவில்லை. ஒரு மத நம்பிக்கையாளன் மற்றொரு மத நம்பிக்கையாளன் கருத்தில் மாறுபடுவதும், அதனை மறுத்துரைப்பதும் தவறில்லை என்றால், எல்லா மதங்களின் கருத்தில் பகுத்தறிவாளன் மாறுபடுவதும் அவற்றை மறுத்துரைப்பதும் எவ்வாறு தவறுடையனவாகும்?

தமிழ் நாட்டில் தலை சிறந்த
வெண் சங்கு
சீயக்காய்த்தூள்
எங்கும் கிடைக்கும்
எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த
செல்வம் - ராணி ஊதுபத்திகளை
வாங்கி உபயோகியுங்கள்
தயாரிப்பாளர் வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மோசியார் வாழ்த்து

[எழினி]

சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை சேர நாட்டை ஆண்டுவந்த சேர மன்னன். அவன் கருவூரில் கோட்டை கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தான். அவன் வீரம் எட்டுத்திக்கும் சென்று முட்டியது. அவன் சென்ற இடமெல்லாம் வெற்றிச் சிறப்போடுதான் மீளுவது வழக்கம். அவனது வீரமும், தீரமும் சோழ பாண்டிய மன்னர்களையெல்லாம் நடுநடுங்க வைத்தன. அவனது செல்வாக்கை எப்படியேனும் அழித்தொழிக்க வேண்டுமென்பதிலே சோழ பாண்டிய மன்னர்கள் கண்ணுங்கருத்துமாக இருந்துவந்தார்கள். சேரமானின் புகழ், அவன் வீரத்திற் சிறந்தவன் என்ற முறையில் மட்டுமல்லாமல், அவன் வள்ளல்தன்மையிலும் மிகச்சிறந்தவன் என்ற முறையில் தமிழக மெங்கணும் பரவி இருந்தது.

அவனைக் கண்டு அவனிடம் பரிசில்பெற்று மகிழவேண்டி, நாற்றிசையிலிருந்தும் புலவரும் பாணரும், பொருநரும் கூத்தரும் ஓயாமல் அவனிடம் வந்துகொண்டேயிருப்பர். மன்னன் பொன்னையும், மணியையும், ஆடை அணிகலங்களையும் அவர்களுக்கு வாரிவாரி வழங்கி, அவர்கள் பெறும் மகிழ்ச்சி கண்டு தானும் மகிழ்ச்சியுறுவதிலே, தனியின்பங்கண்டுவந்தான். அரசன் புலவர் பெருமக்களைத் தன் அருகிலே வைத்துக்கொண்டு, அவர்களது செஞ்சொல்லின்பம் பெற்று மகிழ்வதிலே தனி விருப்பங்காட்டி வந்தான்.

அக்காலப் புலவர்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவர் தலைசிறந்து விளங்கினர். அவரைக் காண அரசன் பெரிதும் அவாவியிருந்தான். அரசனைக் காணவேண்டும் என்பதிலே புலவருக்கும் பெருவிழைவு இருந்துவந்தது. அவர் ஏணிச்சேரி என்னும் சிற்றூரைச் சேர்ந்தவர். அவர் சோழன் தலைநகரான உறையூரைத் தம் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்துவந்தார். அதனால்தான் அவரை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்று அழைத்துவரலாயினர். அவருக்குக் காலோ அல்லது கையோ ஊனமாக இருந்த காரணத்தால், அவரை முடமோசியார் என்று அழைக்கத் தலைப்பட்டனர்போலும் அக்காலத்து மக்கள். அவர் காலத்தில் சோழ நாட்டை ஆண்டுவந்தவன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி என்பவனாவான். சோழநாட்டின் அரசன் பெருநற்கிள்ளி புலவர்களைப் போற்றும் பண்புடையவன்தான் என்றாலும், சேர மன்னனிடம் முடமோசியாருக்கு இருந்த பற்றுதான் மிகவாகும். அந்த அளவுக்கு அவனது புகழைப் பற்றி அவர் கேட்டறிந்திருந்தார். ஒரு முறை சேரமானைக் காணும் விருப்போடு கருவூர்ப் போய்ச் சேர்ந்தார்.

புலவர் முடமோசியார் சேரமன்னனால் பெரிதும் வரவேற்கப்பட்டுப் போற்றப்பட்டார். புலவரும் புரவலனும் சிறிது நாட்களில் பிரியா நட்புடையவர்களானார்கள். புலவரும் நீண்ட நாட்கள் சேரமானின் பாதுகாப்பில், அவனது அரண்மனையிலே தங்கியிருந்தார்.

ஒருநாள் முடமோசியார் சேரமன்னனுடன், அவனது அரசமாளிகையாகிய வேண்மாடத்தின் மேல் இருந்து, காற்று வாங்கிக்கொண்டு உரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

அப்பொழுது சேரமன்னனின் கோட்டையைப் பிடிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன், சோழன் கோப்பெருநற்கிள்ளி யானைமீது ஏறிக்கொண்டு, தன் படையுடன் கருவூரை நோக்கி வந்துகொண்டிருந்தான். படை கருவூர்க்கோட்டைக்கு அண்மையில் வருவதை, வேண்மாடத்தின் உச்சியில் நின்றுகொண்டிருந்த இரும்பொறை பார்த்துவிட்டான்.

உடனே புலவரை விளித்து, "மோசியாரே! ஏதோ படையொன்று நமது கோட்டையை நோக்கி வருகிறது! யாருடைய படை, எதற்

காக வருகிறது என்று தெரியவில்லை...!" என்று மன்னன் கூறினான்.

புலவர் விரைந்து எழுந்து கூர்ந்து நோக்கினார். யாருடைய படையென்று அவருக்குத் தொலைவிலிருந்து தெரியவில்லை. "யாரேனும் மன்னர் உன்னைக் கண்டுவிட்டுப் போகலாம் என்று வருவார்கள்! உன்னிடம் கப்பங்கட்ட வேண்டுமானால் மன்னர்கள் வருவார்களே யொழிய, இங்கே என்ன பட்டங்கட்டிக் கொள்ளவா வருவார்கள்? அந்த அளவுக்கு வீரம் யாரிடம் இருக்கிறது?" என்று புலவர் மறுமொழியாகக் கூறினார்.

"நமது கோட்டையைப் பிடிப்பதற்கென்றே வருபவர்களாக இருந்தாலும், அதனை அவர்களால் அவ்வளவு எளிதாகப் பிடித்துவிட முடியாது. நமது காவல் படைகளும், போர்ப்படைகளும் கோட்டையைக் கண்ணிமைபோல் காத்துக்கொண்டிருக்கின்றன. அதனால் எவரும் நம்மை எதிர்த்துவிட முடியாது" என்று அரசன் புலவரிடம் கூறிக்கொண்டே படை வரும் திக்கு நோக்கித் தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

படையையும், படை ஏந்திவரும் கொடியையும் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்த புலவர், அந்தக் கொடியில் புலியின் சின்னம் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டுகொண்டார். தம்முடைய நாட்டரசன் சோழமன்னனது படையே அது என்று தெரிந்துகொண்டவுடன், "வருவது சோழமன்னனது படை! அது புலிக்கொடி ஏந்தி வருவதைப் பார்! உன்னோடு நட்புகொள்ள சோழன் வருகிறான் போலும்!" என்று புலவர் கூறினார்.

"மோசியாரே! அவன் என்னோடு நட்புறவு கொள்ள வரவில்லை. அவன் என்மீது அழுக்காறு கொண்டு, என்னை அழித்தொழிக்கவே எப்பொழுதும் எண்ணிக்கொண்டிருப்பதாக என்னுடைய ஒற்றர்கள் மூலம் நான் முன்னரே அறிந்திருக்கிறேன். எனவே, அவன் என்னோடு போரிடத்தான் வரவேண்டும் என்று கருதுகிறேன்" என்று மன்னன் புலவரிடம் நிலைமையை விளக்கினான்.

அதற்குப் புலவர் "சோழமன்னன் அப்படிப்பட்டவனாக இருப்பான் என்று நான் எண்ணவில்லை. அவனுக்கு என்ன குறை இருக்கப்போகிறது. அவனது நாடுதான் வளமிக்க ஒன்றாயிற்றே! அவன் ஏன் பிற நாட்டுக்காக ஆவலுறப்போகிறான்?" என்று கூறினார்.

"மோசியாரே! உள்ளபடியே சோழநாடு மிக்க வளமுடையது தானா?"

"அதிலென்ன ஐயம்! அங்கு நீ எங்குபார்த்தாலும் நீர் நிறைந்த வயல்களையும், ஆறுகளையும் தாம் பார்க்கலாம். கழனிகளின் வளப்பம் கண்டு அவற்றில் மயிலினங்கள் நின்றாடும். ஆடும்போது மயிலின் பீலிகள் கழனியிடத்தே விழும். உழவர்கள் நெற்கதிர்களை யறுத்து வாரும்போது, மயிற்பீலிகளும் உடன்சேர்ந்து வாரப்படும். எங்கு பார்த்தாலும் கொழுவிய மீனை உண்டு, நறுங்கள்ளை அருந்தி மகிழ்ந்திருக்கும் மக்களைக் காணலாம். அவ்வளவு வளப்பமுடையது சோழநாடு!"

"சோழன் பெருநற்கிள்ளி எப்படிப்பட்டவன்?"

"சோழனா! அவன் போரிலே சிறந்தவன். அவன் புலித்தோல் கவசம் பூண்டிருப்பான். அவன் ஓயாமல் போரிலீடுபடுபவதால் மாற்றார்களின் அம்புகள் பாய்ந்து, அவனுடைய கவசம் பல இடங்களில் கிழிந்து காணப்படும். அவனது மார்போ பரந்து உயர்ந்து காணப்படும்!" என்று தம் நாட்டு அரசனைப்பற்றிச் சேரனிடத்தில் புகழ்ந்து கூறுவதில் மகிழ்ச்சி கொள்கிறார்.

சோழன் பெருநற்கிள்ளி ஏறியிருந்த யானை திடீரென்று மதம்கொண்டு, முறைதவறி, கண்டபடியெல்லாம் ஓடித்திரிய ஆரம்பித்தது. புலவர் சேரனுக்கு அந்த யானையைச் சுட்டிக் காட்டி, "அதோ, பார்! கடல் நீரைக் கிழித்துக்கொண்டு கப்பல் ஓடுவதைப்போல, யானையொன்று படைகளைக் கிழித்துக்கொண்டு ஓடுகிறதே, அதுதான் சோழன் யானை. பல நட்சத்திரங்களுக்கிடையில் திங்கள் விளங்குவதைப்போல, பல போர் வீரர்களுக்கு இடையில் மன்னன் விளங்குவதைப் பார்! அவன்தான் சோழன் பெருநற்கிள்ளி!" என்று பெருமகிழ்ச்சியோடு கூறுகிறார்.

"யானை மதங்கொண்டு ஓடித்திரிவதைப் போல் தோன்றுகிறதே! சோழன் படும் அவதியைப் பாரீர்!" என்று சேரன் சொல்லுகிறான்.

"அப்படியா!" என்று புலவர் அச்சங்கலந்த வியப்புணர்ச்சியோடு பார்க்கிறார். சோழன்

யானையின்மீது வீற்றிருப்பதும், யானை மதம் பட்டுத் திரிவதும், பாகரும் வீரரும் அதனை அடக்குவதுமான காட்சியை முடமோசியார் பார்க்கிறார். சேரமன்னன் தனக்கும் சோழ மன்னனுக்கும் பகையுண்டு என்னும் கருத்துப் படக் கூறியதைப் புலவர் நினைவிற்குக்கொண்டு வந்து சிறிது நேரம் சிந்தித்துப் பார்க்கிறார். சோழன் தனது பகைவர் இடமாகிய கருவூரிடத் துச் செல்லும்போது, அவன் ஏறிச்செல்லும் யானை மதம்பட்டுவிட்டது என்பதைப் பகை வீரர்கள் அறிந்து கொள்வார்களேயானால், அவர்கள் யானையின் சினத்தை அடக்க முய லாது, அதனை மிகுதிப்படுத்துவதோடு அமை யாது, ஊர்ந்து செல்லும் சோழனுக்கும் தீங்கு விளைவிக்கக்கூடும் என்று கருதுகிறார். சோழ மன்னனுக்குத் தீங்கு ஏற்படுமாயின், தம்மைப் போன்ற பரிசிலர்க்கும் ஆதரவின்றிப் போவ தால் தீங்குண்டாகும் என்றும் அவர் எண்ணு கிறார். உடனே புலவர், தம்முடைய கருத்து சேரமன்னனுக்கும் தெரியவேண்டும் என்ற எண்ணத்தில், அவன் செவியில் விழும் வண்ணம், "சோழன் யாதொரு தீங்குமின்றி இவ்விடம் விட்டுப் பெயர்வானாக!" என்று வாழ்த்துகிறார்.

சேரமன்னன் அந்துவஞ் சேரலிரும் பொறை புலவர் முடமோசியாரின் சொந்த நாட்டுப் பற்றையும், அவர் சொந்த நாட்டர சன்மீது கொண்டிருக்கும் பற்றையும் அறிந்து வியப்படைகிறான். புலவரின் சொல்லுக்கு மதிப்பு கொடுக்கவேண்டும் என்ற காரணத்துக் காகவும், சோழனது நிலைக்கு இரக்கங்காட்ட வேண்டிய காரணத்துக்காகவும், சேரமான், சோழனுக்கு எத்தகைத் தீங்கும் உண்டாக்க வேண்டாம் என்று தன் ஏவலாட்களின் மூலம் போர்வீரர்களுக்குச் சொல்லியனுப்புகிறான். சோழமன்னன் பெருநற்கிள்ளியும் நிலைமை ஏற்றதாக இல்லை என்பதை உணர்ந்துகொண்டு, கருவூரை முற்றுகையிடுவதைத் தளர்த்திக் கொண்டு தம் நாடு நோக்கித் திரும்புகிறான்.

* * *

இது புறநானூற்றில் பதின்மூன்றாவது செய் யுளில் வரும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்ட விளக்கமாகும். புலவர் முடமோசியார் தம் சொந்த நாட்டின்மீதும், சொந்த நாட்டு அரசன்மீதும் எவ்வளவு பற்று வைத்திருக்கிறார் என்பதும், பகையரசனாக இருந்தாலும் அவனிடமும் அந்தப் பற்றை விட்டுக்கொடுக்காமல் வெளிக்காட்டிக்கொள் ளும் திறனும், புலவரின் கூற்றுக்கு மாறுபட நடக்க எண்ணாத அவரது கருத்துக்கிசைய நடக்கத் துணிந்த சேரமன்னனின் பண்பாடும் இச் செய்யுளின் மூலம் கண்டுகளித்தற்குரியன வாகும். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடிய பாட்டுக்கள் பல சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. அவர் ஆய் அண்டிரன் என்ற வள்ளலை மிகவாகப் பாராட்டிப் பாடி யிருப்பதால், அவன்பால் அவருக்கிருந்த நன் மதிப்பு நன்கு விளங்கும்.

* * *

இவனியார் என்குவை யாயின் இவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்(டு)எழில் மார்பின்
மறலி அன்ன களிற்றுமிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்
சுறவினத்(து) அன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோர் அறியாது மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதில் அம்ம
பழன மஞ்ஞை உகுத்த பீலி
கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே

[புறம்—13]

சோழன் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி கருவூரிடஞ் செல்வானைக்கண்டு சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையொடு வேண் மாடத்து மேலிருந்து உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

[புலிநிறம்—புலியினது தோல்; கவசம்—மெய்ப் பறை; பூம்பொறி-பொலிவினையுடைய தோலினது இணைப்பு; மறலி-கூற்றுவன்; மரீஇயோர்-தன்னை மரு விய பாகரை; மைந்துபட்டன்று—மதம்பட்டது; பழ னம்—வயலிடத்து; உகுத்த—உதிர்த்த.]

தொடர் கதை

பனிவெளியில்

[இரா. செழியன்]

அன்றிரவு உறங்கப்போகுமுன், நல்ல நாளைக் கழித்தோமென்ற மகிழ்ச்சியில் தங்கம் இருந்தாள். காலையில், மாலையில், கடும் வெய்யலில், சச்சரவில், சந்தடியில் எதையும் நினைத்துப் பார்க்க நேரமிருப்பதில்லை. சந்தடியும் சச்சரவும் அற்றதும், வெயில் தாழ்ந்ததும், தனிமையும் அமைதியும் சேர்ந்ததும், கழிந்த பொழுதைப்பற்றி சில முக்கிய சம்பவங்கள், மீண்டும் நினைவுக்கு வருகின்றன. அன்றைய தினம் தங்கத்திற்குப் புதிய கார் ஒன்றுவந்தது, நீண்ட நாள் கழித்து குலசேகரன் வந்து பார்த்தது— இரண்டும் நினைவுக்கு வந்தன.

முதலில் அடையாளந் தெரியாது திகைத்த போதிலும், குலசேகரன் பழையபடியே இருந்தான். சிரிக்கும்பொழுதும், பேசும்பொழுதும், சிறுவன் குலசேகரனுக்கும், இப்பொழுது வந்துபோன அட்வகேட் குலசேகரனுக்கும் அதிக வேறுபாடு கிடையாது. பள்ளிப் பருவத்தில் வீட்டில் சாதுபோல இருந்தபோதிலும், பள்ளிக்கூடத்தில் சண்டையென்று வந்துவிட்டால், குலசேகரன் சளைப்பதில்லை. ஒரு சமயம் தங்கம் வைத்திருந்த கலர் பென்சிலை ஒரு பையன் திருடிவிட்டான். பென்சில் காணாமற்போனதும், தங்கம் அழ ஆரம்பித்து விட்டாள். "இரு! வந்துவிட்டேன்!" என்று குலசேகரன் அவளிடம் தன் புத்தகப் பையைக் கொடுத்துவிட்டு மற்றப் பையன்களைச் சோதனை போட்டான். கடைசியில் ஒரு பையனிடம் கலர் பென்சில் கிடைத்தது. ஆனால் அது தன்னுடையதென வாதாடினான். குலசேகரன் பென்சிலைப் பிடுங்கிக்கொண்டான். இருவருக்குமிடையே பேச்சு வளர்ந்து, கடைசியில் கைச் சண்டைக்கு வந்தது. சண்டை என்றதும் மற்றப் பையன்கள் சுற்றிலும் நின்று கூச்சல் போட்டு, உற்சாகப்படுத்தினார்கள். குலசேகரன் சட்டையைக் கழற்றித் தங்கத்திடம் கொடுத்துவிட்டுச், சண்டைக்குத் தயாரானான். எதிர்த்து வந்த பையனும் சட்டையைப் போட்டுவிட்டு, வந்தான். கோபாவேசத்துடன் இருவரும் போராடினார்கள். ஒருவரையொருவர் தள்ளி, இருவரும் மண்ணில் புரண்டார்கள். கூடியிருந்த மாணவர்கள் கூச்சல்போட்டுச் சண்டையை ஆரவாரித்தவண்ணமிருந்தனர். தங்கம் சண்டையைப்பார்த்து அழுதவண்ணம் நின்றுகொண்டிருந்தாள்.

குலசேகரனை எதிர்த்தவன் கொஞ்சம் கனமான பையன். சண்டை போடும்பொழுது, எதிர்பாராதவிதமாகக் குலசேகரனின் கழுத்தைப்பிடித்து வேகமாகத் தள்ளிவிட்டான். குலசேகரன் குப்புற தரையில் விழுந்தான். தரையிலிருந்த கல் அவன் நெற்றியில் குத்தி, காயப்படுத்திவிட்டது. நெற்றியைத் துடைத்த பொழுது, கையில் இரத்தம்பட்டிருப்பதைப் பார்த்ததும், குலசேகரனுக்குக் கோபமும் ரோஷமும் வந்துவிட்டது. பாய்ந்து போய் எதிர்த்து நின்றவனைக் கீழே தள்ளி, அவன் மேல் உட்கார்ந்து குத்துகள்விட ஆரம்பித்தான். இந்தச்சமயத்தில் அவர்களுடைய பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர், அங்கு வந்தார். அவர் வருவதைப் பார்த்ததும், கூடியிருந்த மாணவர்கள் ஓடிவிட்டனர். தலைமையாசிரியர் அருகில் வந்தபொழுது, சண்டைபோட்டுக் கொண்டிருந்த இருவரும், பக்கத்தில் புத்தகப் பையை வைத்துக்கொண்டு நின்ற தங்கமும் தான் மிஞ்சினார்கள். மறுநாள் தலைமையாசிரியர் முன் விசாரணை நடந்தது. சண்டை போட்ட இருவருக்கும் பிரம்படிகள் கிடைத்தன. தங்கத்திற்கு கலர் பென்சில் கிடைத்தது.

குலசேகரனுடன் சண்டை போட்ட பையனின் பெயர் இப்பொழுது தங்கத்திற்கு மறந்துவிட்டது. சண்டைக்குக் காரணமாயிருந்த பென்சில், எங்கேயோ மறைந்துவிட்டது. சண்டைபோட்டபொழுது, குலசேகரனின் நெற்றியில் ஏற்பட்ட தழும்பு இன்னும் மறையாமலிருந்தது. இன்று மாலை அந்தத் தழும்பைப் பார்த்ததும், தங்கத்திற்கு பழைய சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது.

“சேகரன் எப்படி?” என்று தங்கம் ஆரம்பித்தாள். குலசேகரனைப்பற்றி தன் கணவன் என்ன மதிப்பு தருகிறார் என்பதை அறிய அவள் விரும்பினாள்.

பத்திரிக்கை பார்த்துக்கொண்டிருந்த கமலநாதன் “எப்படி யென்றால்? இன்றுதானே பார்த்தேன்” என்று பதிலளித்துவிட்டான். பத்திரிக்கையிலுள்ள செய்தியின் முக்கியத்துவமோ, அல்லது பேசப்பட்ட பொருளில் அக்கரையில்லாததோ, என்னவோ, அவன் பேச்சை வளர்த்தவில்லை. தங்கம் ஓரளவு ஏமாற்றமடைந்தாள்.

“சேகரன் நல்ல கெட்டிக்காரன். பள்ளிக்கூடத்திலும் நன்றாகப் படிப்பான். நல்ல வக்கீலாக வந்துவிடுவான்” என்று தங்கம் தொடர்ந்து பேசினாள்.

குலசேகரனைப் பற்றித் தங்கம் புகழ்ந்து பேசுவது கமலநாதனுக்குப் பிடிக்கவில்லை. “சட்டக் கல்லூரியிலிருந்து வெளிவருகிற ஒவ்வொருவனும் நல்ல வக்கீலாகவேண்டும் என்ற தீர்மானத்தோடு தான் வெளிவருகிறான்” என்று அவன் சொன்னான்.

“இல்லை, அப்படியல்ல! சேகரன் விடா முயற்சியுடன், தான் எடுத்ததைச் செய்வான். அவனைப்பற்றிச் சிறுவயதிலிருந்தே தெரியுமாதலால் அப்படிச் சொல்கிறேன்” என்று தங்கம் படுக்கையில் புரண்டுபடுத்தவண்ணம் மொழிந்தாள். குலசேகரனைப் பற்றிப் பேசும்பொழுது “அவன்” “இவன்” என்று தங்கம் பேசுவது,—சிறுபிள்ளைப் பருவத்தில் பழகியதால் ஏற்பட்ட உரிமை—கமலநாதனுக்குச் சற்று அருவருப்பாக இருந்தது. அவள் பேசுவதைச் சரியாகக் கவனத்தில் வைக்காமல் பத்திரிக்கையைப் புரட்டிக்கொண்டிருந்தான்.

“குலசேகரன் உனக்கு நெருங்கிய உறவா?” என்று கமலநாதன் திடீரென்று ஒரு கேள்வியைப் போட்டான்.

“அதுதான் முதலிலேயே சொன்னேனே, என் அத்தை அஞ்சலையம்மா. அவர்களுடைய தங்கை மகன்.”

“அப்படியானால் உன்னுடைய அப்பாவின் இரண்டாவது தங்கையினுடைய மகன்.”

“இல்லை, அஞ்சலையத்தை என் அப்பாவினுடைய சொந்தத் தங்கையல்ல, தூரத்து உறவில் தங்கைமுறை வேண்டும். சேகரன் பிறந்ததும் அவன் அம்மா செத்துவிட்டார்கள். அஞ்சலை யத்தைதான் அவனை வளர்த்தது.”

“வேலூரில் இருந்தபொழுது உன்னுடன் இருந்தார்களே அவர்கள்தானே!”

“ஆமாம்! சேகரனைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி என்னைக் கேட்டார்கள்! பின் கோபித்துக்கொண்டு போய்விட்டார்கள். அதற்கப்புறம் பார்க்கவேயில்லை.”

கமலநாதன் உள்ளத்தில் சுருக்கென்று தைத்தது, தனக்குப் போட்டியாக ஒருசமயம் குலசேகரன் இருந்திருக்கிறான். பேப்பரை மெதுவாக கீழேதாழ்த்தி, தங்கத்தின் முகத்தை ரகசியமாகக் கமலநாதன் கவனித்தான். அவளுடைய முகத்தில் எத்தகைய திடீர் மாறுதலையும் காணோம். கமலநாதன் உற்றுப்பார்ப்பதை, தங்கம் கவனிக்கவில்லை. சோம்பல் முறித்து கொட்டாவிவிட்டு, தங்கம் கண்களை மூடினாள். கையிலிருந்த பத்திரிக்கை நழுவி கீழே விழுந்ததையும் கவனிக்காமல், கமலநாதன் உட்கார்ந்திருந்தான்.

* * *

டாக்டர் சஞ்சீவி ஒரு தோல் பையுடன் இறங்கிவந்தார். தங்கம் அப்பொழுது எதிர்ப்பட்டாள்.

“அனாதை இல்லத்துக்கு மற்றொரு குழந்தை வருகிறது. அதற்காகப் போகிறேன். வா! போய் பார்க்கலாம்” டாக்டர் சஞ்சீவி தங்கத்தையும் உடனழைத்துக்கொண்டார்.

பிரசவ விடுதிகளில் குழந்தைகள் பிறந்து அனாதைகளாக விடப்பட்டவர்களை, ஆஸ்பத்திரியிலேயே எடுத்து, பக்கத்தில் ஒரு சிறு இடத்தில் வளர்த்துவந்தார்கள். அதற்குத்

தலைவராக டாக்டர் சஞ்சீவி இருந்தார். அனாதைகளாக ஏற்கப்படும் குழந்தைகள், சகல வசதிகளுடன் வளர்க்கப்பட்டு, கல்வி தரப்பட்டு, பின் தக்க வயதடைந்ததும் அனுப்பப்படுவார்கள். சில சமயங்களில் பிரசவத்துக்கு வரும் தாய்மார்களே, குழந்தையை வளர்க்கும் வசதியும், வாய்ப்பும் இல்லாதவர்களாக இருந்தால், அந்தக் குழந்தைகளை அனாதை இல்லம் ஏற்று ஆதரித்தது. அதுபோலக் குழந்தைகளை ஏற்றுக்கொள்ளும்பொழுது, தாயிடமிருந்தும், அவளுடைய உறவினரிடமிருந்தும் அதற்கான பத்திரங்களில் கையெழுத்துப் பெற்றுக்கொள்வது வழக்கம். அனாதை இல்லத்தில் மேற்பார்வையாளராக டாக்டர் சஞ்சீவி அந்த ஆண்டு இருந்ததால், வரப்போகும் குழந்தையைக் கவனித்து ஏற்பாடு செய்வதற்காகச் சென்றார்.

டாக்டர் சஞ்சீவியும், தங்கமும் வளைந்து செல்லும் பாதைகளின் வழியே நடந்து, கடைசியாக அந்த வார்டுக்கு வந்துசேர்ந்தார்கள். அங்கிருந்த நர்ஸ் அவர்களை அழைத்துச் சென்று 12-ம் நம்பர் படுக்கைக்கு முன் விட்டாள். அந்தப் படுக்கைக்கருகே சிறு தொட்டிலில் ஒருவாரத்துக் குழந்தை உறங்கிக்கொண்டிருந்தது. தாய் மறுபக்கம் சாய்ந்து படுத்திருந்தாள்.

“இந்தாம்மா! டாக்டர் வந்திருக்கிறார்” என்று நர்ஸ் அவளைத் தட்டினாள். அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள். தங்கம் அவளை உற்றுக் கவனித்தாள். பத்து நாட்களுக்குமுன், மயக்கம்போட்டு வந்து சேர்க்கப்பட்ட பெண் தான் அவள். சுவற்றில் மாட்டப்பட்டிருந்த அட்டையைப் பார்த்தாள், ‘சகுந்தலா’ என்ற பெயர் தெரிந்தது. அவளும் டாக்டர் தங்கத்தை உடனே அடையாளங் கண்டுகொண்டாள்.

தங்கம் அவள் படுக்கையருகில் உட்கார்ந்து, “எப்படியம்மா இருக்கிறாய்?” என்று கேட்டாள்.

“நன்றாக இருக்கிறேங்க!” என்று மரியாதையுடன் அவள் பதிலிறுத்தாள்.

சிறிது நேரம் எல்லோரும் பேசாமலிருந்தார்கள். டாக்டர் சஞ்சீவி நர்சைப் பார்த்து “இந்தப் பெண்தானே குழந்தையைத் தரப் போவதாகச் சொன்னது” என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

படுக்கையிலிருந்த பெண் அதைக் கேட்டதும், “இல்லை, நான் குழந்தையைக் கொடுக்க விரும்பவில்லை” என்று ஆங்கிலத்தில் பதிலளித்தாள். அவள் பக்கத்தில் ஒரு ஆங்கில வார ஏடு கிடந்தது. அவள் கல்விப்பயிற்சி உடையவளாக, ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரிந்தவளாக இருக்கவேண்டும்.

“நேற்று நீதானே என்னைக் கூப்பிட்டு, குழந்தையைக் கொடுத்துவிட்டுப் போவதாகச் சொன்னாய்?” என்று நர்ஸ் கேட்டாள். அவளுக்குப் பயம் தன்மீது ஏதாவது குற்றச்சாட்டு வந்துவிடப்போகிறதோவென்று.

“ஆமாம்! ஆனால் இன்று அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டேன். குழந்தையை என்னிடம் கொடுங்கள். நான் போய்விடுகிறேன்!” என்று குழந்தையை வாரியெடுத்துக் கொண்டாள். மற்றப் படுக்கையிலிருக்கும் பெண்கள் இவளுடைய சத்தத்தைக் கேட்டு, அங்கு நிற்பவர்களைப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

“உஸ்! சத்தம்போடாதே! யாரும் உன்னை வற்புறுத்திக் குழந்தையைத் தரச்சொல்லவில்லை. உன்னிஷ்டத்துக்கு விரோதமாக நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. குழந்தையை நீயே வைத்துக்கொள்ளலாம்” என்று சொல்லிவிட்டு, டாக்டர் சஞ்சீவி திரும்பினார்.

“பேசாமல் படுத்துக்கொள். இன்னும் இரண்டொரு நாளில் போக அனுமதி தருவார்கள். அப்பொழுது போகலாம். குழந்தையைக் கஷ்டமில்லாமல் நீ வளர்க்கவேண்டும். அவ்வளவுதான் எங்களுக்கு வேண்டியது” என்று தங்கம் சமாதானப்படுத்தி, அவளைப் படுக்கையில் உட்காரவைத்தாள். நர்ஸ் குழந்தையை வாங்கித் தொண்டிலில் போட்டாள். நடக்கும் அமளியைப் பற்றிக் கவலைப்படாமல், குழந்தை மீண்டும் தூங்க ஆரம்பித்தது. தலையைப் பிடித்துக்கொண்டு, தாய் உட்கார்ந்திருந்தாள். எவரையும் பார்க்க அவள் விரும்பவில்லை. தாங்கமுடியாத வேதனையை அவள் அனுபவிப்பதுபோல் தெரிந்தது.

* * *

குலசேகரன் வந்ததற்கு ஒரு வாரம் கழித்து, தங்கம் அவன் வீட்டுக்குச் சென்றிருந்தாள். மாடிவீட்டின் மேல்பகுதியில் அவன் குடியிருந்தான். தங்கம் காரைவிட்டு இறங்கியதும்,

அவளை வரவேற்க, அத்தை அஞ்சலையம்மாள் கீழே வந்தாள். தங்கம் சற்று பயத்துடனேயே அருகில்வந்தாள். அத்தை கோபித்துக்கொண்டு போய் நான்கு ஆண்டுகளுக்கு மேலாகிறது. அதற்கப்புறம் இருவரும் சந்திக்கவில்லை. இது தான் முதல் தடவையாகும். அத்தை எல்லா வற்றையும் மறந்துவிட்டார்களென்றே தோன்றியது, "வாடியம்மா, தங்கம்!" என்று தங்கத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டார்கள். இந்த அன்பு வரவேற்பு எதிர்பாராததாக யிருந்தது. தங்கத்திற்கு அவளையறியாமல் கண்களில் நீர் படர்ந்தது. எவ்வளவு கோபதாபங்கள் இருந்தாலும், பாசம் மட்டும் மறைந்துபோகவில்லை.

"எப்படி அத்தை இருக்கிறீர்கள்?" என்று மாடிப் படிக்கட்டுகளைக் கடந்துகொண்டே தங்கம் கேட்டாள். யாரும் பார்த்துவிடாவண்ணம், கண்களைத் துடைத்துக்கொண்டாள்

"அத்தையைப்பற்றி இப்பொழுதாவது அக்கரை வந்ததே!" என்று அத்தை அவளைப் பார்த்துச் சற்று கோபத்துடன் கேட்டாள்.

"இல்லையத்தை! நீங்கள் கோபித்துக் கொண்டு போனபிறகு, எனக்குப் பயமாக இருந்தது" என்று தங்கம் தயங்கினாள்.

"நான்தான் கோபக்காரி, வயதானவள் நீ சிறிசுதானே அடங்கிப்போகவேண்டாமா?"

அத்தை தங்கத்தைப்பற்றி, அவளுடைய கணவனைப்பற்றி, அவர்களுடைய வேலையைப் பற்றி எல்லாம் விசாரித்தாள்.

"உன் வீட்டுக்காரர் ரொம்ப நல்லவனுமே!"

"யார் அத்தை சொன்னது?"

"சேகரன்தான் அங்கு வந்த பிறகு சொன்னான். கோர்ட்டில்கூட நல்ல பேர்தானும். சர்க்கார் தரப்பு வக்கீல் என்று சொன்னான். ஏன் தங்கம், சர்க்கார் தரப்புக்கு வக்கீல்? சர்க்கார் ஏதாவது குற்றங்குறை செய்தால், அவர்களுக்காகப் பேசவா?"

தங்கத்திற்குச் சிரிப்பு வந்தது. "அப்படியில்லை, அத்தை! கொலை, கொள்ளை யாராவது செய்துவிட்டால், சட்டத்தை மீறி யாராவது நடந்தால், அவர்கள்மீது வழக்குத் தொடருவது வேலை."

"ஹைகோர்ட்டில் இருக்கிறனே, அப்படியானல் இன்னும் கொஞ்சகாலத்தில் ஜட்ஜாக ஆகிவிடுவானு?" என்று அத்தை கேட்டார்கள்.

"சொல்லமுடியாது. எல்லாம் போகப் போகத்தான் தெரியும்."

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, குலசேகரனும் வந்துசேர்ந்தான்.

"பார்த்தியா, சேகர்! தங்கம் தனியாக, தானே கார் ஓட்டிக்கொண்டு வந்தாள்."

"பெரியம்மா! தங்கம் முன்போலச் சிறிய குழந்தையா? டாக்டர் தங்கம் அல்லவா இப்பொழுது? தங்கம், உன் கணவன் வரவில்லையா?"

"ஆஸ்பத்திரியிலிருந்து கிளம்பியதும் நேராக வந்துவிட்டேன்."

* * *

தங்கம் திரும்பி வரும்பொழுது ஆறு மணிக்கு மேலாகிவிட்டது. மையிருள் வானத்திலும், மண்ணிலும் விழ ஆரம்பித்தது. எதிர்பார்த்ததைவிட நல்ல விதத்தில், அத்தையின் வரவேற்பைப் பெற்றதும், தங்கத்தின் மனம் உல்லாசத்திலும் மகிழ்ச்சியிலும் ஆழ்ந்திருந்தது.

கார் வேகமாகக் கடற்கரையோரமாகச் சென்றுகொண்டிருந்தது. காற்றுத் தவழ்ந்து வீசியது. மிக நெருக்கடியான இடங்களையும், தங்கம் கடந்துவந்தாள். பாதையின் இடது புறத்திலும் வலது புறத்திலும் கார்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன பல கார்கள் அவளுக்கு முன் வேகமாகச் சென்றுகொண்டிருந்தன. சில விர்ரென்று அவளைக் கடந்து சென்றன.

மக்கள் நெருக்கடியுள்ள இடம் கடந்ததும், தங்கம் வேகத்தைச் சற்று அதிகப்படுத்தி ஓட்டினாள். முனை திரும்புமிடம் சமீபத்தில் வந்தது. திடீரென்று விளக்கு வெளிச்சத்தில், கார்முன் யாரோ ஒருவர் தள்ளாடிய வண்ணம்-நடுப்பாதையில் விழுந்துவிடுவதுபோல, வந்து கொண்டிருந்தார். உள்ளம் அதிர்ந்திட, தஙகம் உடனே பிரேக்கைப் பலமாக அழுத்தினாள். 'கிரீச்'சென்ற சத்தத்துடன் கார் நின்றது. அந்த உருவத்தின்முன். அதற்குள் அந்த உருவம் கீழே விழுந்துவிட்டது, கையில் ஒரு மூட்டையுடன்.

(தொடரும்)

அண்டசராசரம்-7

[இந்து மதத்தின் வேத. புராணங்களின்படி. அண்டசராசரங்களையெல்லாம் பிரமதேவன் படைத்தான். இவ்வளவு பெரிய பிரமாண்ட படைப்புக்கு ஆதாரமாக—அஸ்திவாரமாக ஒரு ஆமை வைக்கப்பட்டது. ஆமை முதுகின்மேல் அஷ்டதிக்கு யானைகளும். ஆயிரந்தலை ஆதிசேடனும் இருக்கின்றன. அவைகளுக்குமேல் ருத்ரர்கள் வசிக்கும் ருத்ரபுவனம் இருக்கிறது. ருத்ரபுவனத்துக்குமேல் புகைமண்டலம். புகைமண்டலத்துக்குமேல் வெட்டவெளி. அவற்றுக்குமேல் யமபட்டணங்களும், அதையடுத்து 28 கோடிநரகங்களும் நிற்கின்றன. நரகலோகத்தின்மேல் கூஷ்மாண்டபுவனம் அதற்குமேல் ஏழு பாதாளங்கள், அதையடுத்து ஆடகேசுரபுவனம், அதையும் கடந்தால் பூலோகம். பூலோகத்திற்கு உயரே புவலோகம் ஆரம்பிக்கிறது. புவலோகத்தில் மேகமண்டலங்களும், வீரசுவர்க்கமும், காந்தருவர் வித்தியாதரர்களும், கருடன், ஐராவதம் போன்றவைகளும் உள்ளன. புவலோகத்துக்கு மேல் சூரியலோகம். சூரியலோகத்துக்கு அப்பால் சந்திரலோகம். சந்திரலோகத்துக்கு மேல்நோக்கி. அடுத்தடுத்து முறையே நட்சத்திரமண்டலம். செவ்வாய் மண்டலம். புதன் மண்டலம், பிரகஸ்பதி மண்டலம், சுக்கிரமண்டலம். சனிமண்டலம் முதலியன இருக்கின்றன. சனிமண்டலத்தில், சனிபகவானைத் தவிர, இராகு கேதுக்கள் இருக்கின்றன.]

இராகு கேதுக்கள்

சனி மண்டலத்துக்குள் இராகு கேதுக்கள் என்னும் இரண்டு பாம்புகள் இருக்கின்றனவாம். இந்தப் பாம்புகள் சூரிய சந்திரர்களை விழுங்குவதால்தான் கிரகணங்கள் உண்டாவதாகப் புராணங்கள் கூறுகின்றன, மக்களும் நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

இராகு கேதுக்கள் சூரிய சந்திரர்களை விழுங்குவதற்குப் புராணக்கதை இருக்கிறது. தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்ததும், திருமால் மோகினி உருவத்துடன் வந்து அமிர்தத்தைப் பங்கிட்டுக் கொடுத்தாராம் தேவர்களை ஒருபுறமாக அமர்த்திவிட்டு, அசுரர்களை மற்றொரு புறத்தில் ஒதுக்கிவிட்டு, அமிர்தத்தைத் தேவர்களுக்கு மட்டும் மோகினி கொடுத்துவந்தாள். அப்பொழுது இராகு என்பவன், சூரியன் சந்திரன் இருவருக்குமிடையில் ஒளிந்து நின்று, அவர்களுடன் கையை நீட்டி, அமிர்தத்தைப் பெற்று, உண்டான். இதைக் கண்டுகொண்ட சூரியனும், சந்திரனும், இராகு ஒளிந்து நின்று அமிர்தம் பெறுவதை மோகினிக்குத் தெரிவித்தனர் கண்ஜாடையாக. தன்னைப்பார்த்து, சூரியனும் சந்திரனும் கண்ஜாடை செய்வது மோகினிக்கு முதலில் வேறுவிதமாகத் தெரிந்தது. பின் இராகு ஒளிந்திருப்பதைக் கண்டுகொண்டாள். உடனே தன் கையிலிருந்த சட்டியால் இராகுவின் தலையில் ஓங்கிப் போட்டாள். மோகினி அடித்த வேகத்தில், இராகுவின் தலை உடலிலிருந்து பிரிந்துபோய் விழுந்தது. பிரிந்த தலை இராகுவென்றும், மற்ற உடல் கேதுவென்றும் வழங்கப்பட்டன. பின் இந்தத் தலையும், உடலும் வெவ்வேறாகவேச் சென்று கடுமையான தவம் செய்து, கிரகபதம் பெற்றுச் சனி மண்டலத்தில் இடம் பெற்றன. சூரிய சந்திரர்கள் தங்களைக் காட்டிக்கொடுத்ததால், அவர்கள்மீது வஞ்சினங்கொண்டு, இராகுவும் கேதுவும் பாம்புஉருவமெடுத்து, அவர்களை விழுங்கிவிடுகின்றனர். இவ்வாறு விழுங்கிவிடுவதால்தான், கிரகணங்கள் உண்டாவதாகப் புராணக்கதை கூறுகிறது.

சனி மண்டலத்து உச்சியில் துருவன் இருக்கிறான். கிரகாதிபதிகளின் தேர்களில் பூட்டியிருக்கிற கயிறு துருவன் கையில் சேர்கின்றன. சந்திரனுடைய தேரிலிருந்து சம்பகம் என்ற கயிறும், மற்ற கிரகங்களின் தேர்களைப் பிணைத்து வராகவாயு என்ற கயிறும் துருவன் கையில் சேர்க்கப்பட்டுள்ளன. துருவனுடைய பார்வையின் கீழ் அந்தத் தேர்கள் செல்லுகின்றன.

சனி மண்டலம் 805 கோடிமைல் உயர்ந்துள்ளது, புராணக்காரரின் "அளப்புப்படி".

சப்தரிஷி மண்டலம்

சனி மண்டலத்துக்குமேல், சப்தரிஷிகள் மண்டலம் இருக்கிறது.

ரிஷிகளிலெல்லாம் உயர்ந்தவர்கள் இந்த ஏழு ரிஷிகளாகும். தங்களுடைய தவவலிமையால், அவர்கள் இந்த உலகை அடைந்தார்கள். சப்த ரிஷிகளானவர்கள் :—அத்திரி, வசிட்டர், காசிபர், கௌதமர், பரத்துவாசர், விசுவாமித்திரர், ஜமதக்கினி. இவர்கள் ஒவ்வொருவரையும் பற்றிக் கவனிக்கலாம்.

அத்திரி : பிரமனுடைய கண்ணில் பிறந்தவர். இவர் மனைவி அனுசூயா. காட்டில் தவஞ்செய்துகொண்டிருந்தபொழுது, தனது மனைவியின் அங்க அழகு கண்டு, அடக்கமுடியாத மோகங்கொள்ள, கண்வழி வழிந்த காமத்தில் சந்திரன் உண்டானதைச் சந்திரனைப் பற்றிய விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

அநுசூயையின் அழகைக் கேள்விப்பட்டு, மும்மூர்த்திகள் சந்நியாசிகள்போல் வேடமிட்டு வந்தார்களாம். அவர்களுக்குப் பிச்சையிட அநுசூயை வந்தாளாம். வந்திருந்த முனிபுங்கவர்கள் அந்தப் பிச்சையை ஏற்றுக்கொள்ளவில்லை. "நிர்வாணமாக வந்து அன்னமிட்டால்தான் ஏற்றுக்கொள்வோம்!" என்று முடிவாகத் தெரிவித்தார்கள். காவியுடைக்காரர்கள் காமநோக்குடன் பேசினார்கள். அநுசூயைக்கு என்னசெய்வது என்று தெரியவில்லை. அதிதிகளுக்குப் பிச்சையிடாமல் அனுப்பக் கூடாது. பிச்சையிடவேண்டுமென்றால் நிர்வாணமாக...! அநுசூயை யோசித்தாள். அதிதிகள் அவளைக் காண, அவள் அழகைக் காணத் துடித்துக்கொண்டார்கள். நிர்வாணமாய் வரவேண்டும், இல்லையென்றால் அன்னமிடாது அனுப்பவேண்டும். இரண்டில் எதைச் செய்தாலும் அநுசூயைக்குத் தவறாக இருந்தது. கடைசியாக அநுசூயை நிர்வாணமாக வந்தாள், அதிதிகளாக வந்தவர்களைக் குழந்தைகளாகச் செய்துவிட்டு. மும்மூர்த்திகள் அநுசூயையின் கோலத்தை அவ்வாறு கண்டு, சென்றனர் என்று புராணம் கூறுகின்றது.

மற்றொரு புராணத்தில், விஷ்ணு அநுசூயையைக்காண நினைத்தாராம். அதற்காக அத்திரியின் உடலுள் புகுந்து, வேதியராகப் பிறந்தாராம். அநுசூயை அந்தக் குழந்தைக்குப் பாலூட்டினாளாம். குழந்தை உருவிலிருந்த விஷ்ணுவுக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. குழந்தை விஷ்ணுவுக்குத் தத்தாத்திரேயர் என்ற பெயர். தனது மனைவியின் அழகைக் காண 'குழந்தைகள்' பல அடிக்கடி தனது பர்ணசாலைக்குள் வந்துவிடுவதைப் பற்றி அத்திரி முனிவர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை,

வசிட்டர் : பிரமதேவனின் புத்திரர்களில் ஒருவர். தன் தவவலிமையால் ரிஷிகளில் முதலிடம் பெற்றவர். வசிட்டர் வாயால் ஒரு முறை 'ரிஷி' என்று அழைக்கப்பட்டால் போதும் என்று விசுவாமித்திரர் தவஞ்செய்தாராம். அந்த அளவு தவமுனிவர்களில் தலைசிறந்து விளங்கியவர். ஆனால் தவத்தில் சிறந்தவர், முனிவர்களிளெல்லாம் முதல்வர் என்று தொழப்படும் இவரது கதையைப் பார்த்தால், காமக் களியாட்டங்களுக்குக் குறைவில்லாமல் இருக்கிறது.

வசிட்டர் காட்டிலே அமர்ந்து கடுந்தவஞ் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது அட்சமாளிகை என்று புலையர் சாதியைச் சேர்ந்த— வேதங்களில் மிகத்தாழ்ந்ததாகக் கூறப்படும் சாதியைச் சேர்ந்த பெண் காட்டிலே விறகு சேர்க்க வந்தாள். பெண் வாடை பட்டதும், வசிட்டரின் தவம் கலைந்தது. கண்ணைத் திறந்தார், கட்டுடல் கன்னி ஒருத்தி சற்று தூரத்தில் விறகு பொறுக்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். இவர் மனதில், உணர்ச்சியெனும் விறகில் காமம் மூட்டிய தீ பலமாக எரிய ஆரம்பித்தது. யோக தண்டத்தைத் தூரவைத்தார், ஜபமாலையைக் கீழே போட்டார், மான் தோலை விட்டெழுந்தார், புள்ளிமான் அருகே வந்தார். தேவர், மூவர் எவர்வந்து காட்சியளித்திருப்பினும் வசிட்டரின் வேகத்தைத் தடை செய்திருக்கமுடியாது.

வசிட்டர் ஒரு மலர்க்கொத்தை எடுத்து, வளைந்திருந்த முதுகின்மீது வீசினார். குனிந்திருந்த மங்கை எழுந்து நின்றாள், மாமுனிவர் தம்முன் நிற்பதைக் கண்டாள். தாழ்ந்த குலத்தவளாகிய தான், அவர் தவம்செய்யும் இடத்திற்கு அருகில் வந்தது தவறு என நினைத்தாள். அதற்காக அவர் என்ன சாபமிடுவாரோவென அஞ்சினாள்.

"சாமி! விறகொடிக்கத் தெரியாமல் வந்து

விட்டேன். மன்னித்துவிடுங்கள்!" என்று நடுங்கினாள்.

கன்னியவள் நடுங்குவதை ஒரு குளிர் மலர்ப் பார்வையால் போக்கி, "கண்ணே! கலங்காதே, இன்னும் விறகு வேண்டுமா? நானே தருகிறேன்" என்று பக்கத்தில் கிடக்கும் சுள்ளியைப்பொறுக்கி அவள் கையில் கொடுத்தார் தன் கை அவள் கையுடன் படுமாறு.

"போதும் சாமி! நான் போகிறேன்" என்று அவள் கிளம்பினாள்.

"போதாது, இன்னும் விறகு தருகிறேன் வா!" என்று அவள் கையைப் பிடித்து அழைத்தார்.

"ஐயோ. சாமி! கையை விடுங்க!"

"ஏன் கலங்குகிறாய்?"

"ஊரில் நான் தாழ்ந்த சாதிங்க."

"அது ஊரில், இது காடு, இரண்டுபேரும் ஒன்றுதான்."

"தீண்டாத பெண்ணுங்க."

"தீண்டாத பெண்தான். யாரும் தீண்டாத மேனி, வண்டு தீண்டாத மலர்!"

"விறகு எங்கே யிருக்குங்க?"

"விறகா? நானே ஒரு விறகு, நீயும் ஒரு விறகுதான்."

"நீங்க விறகா! என்னங்க சாமி! ஏன் சாமி உங்க கையை இப்படி கொதிக்குது?"

"அதுதான் சொன்னேனே! நான் ஒரு விறகு, அது பற்றி எரிகிறது."

"ஐயோ! எங்கே சாமி எரிகிறது? உங்க உடம்புக்குக் காய்ச்சல் வந்துவிட்டதுங்க."

"இல்லை, விறகு இங்கே எரிகிறது, அனல் உடல் முழுவதும் வீசுகிறது!" என்று அவள் கையை எடுத்துத் தன் மார்பின்மீது வைத்தார். உண்மையில் அவர் மார்பு கொதித்தது.

"நல்ல கடுமையான காய்ச்சல்! நான் போய் பச்சிலை கொண்டுவருகிறேன்."

"பச்சிளம் பாவாய்! நீதான் அந்தப் பச்சிலை!" அவள் தோளைப் பற்றிக்கொண்டு "பெண்ணே, கண்ணே! கனியே கனிரசமே!" என்று அடுக்கினார், அருந்தவத்துப் பெரியவர் தாழ்குலப் பெண்ணிடம்.

வேதாந்தியின் விநோதப் பேச்சுகள் அவளுக்குப் புரியவில்லை. முதலில் விறகு என்று அவளைப் பற்றிச் சொன்னார், பின் பச்சிலையென்றார், இப்பொழுது கனி, கனிரசம் என்கிறார். இன்னும் கொஞ்சம் நேரம் போனால், மரம் காடு என்றெல்லாம் சொல்ல ஆரம்பித்துவிடுவார்.

"சாமி! அந்தி சாய்ந்துவிட்டதுங்க! நான் போகணும்! உங்களைப்போல உயர்ந்த சாதியார் இருக்கிற பக்கமே நாங்கள் வருகிறது தப்புங்க! எங்களுடைய கைவிரல் நிழல் பட்டாலும், எங்களுக்குத்தான் பாவம்!"

"பாவமா! அடி பாவையே! உன் விரல் நிழல் பட்டால் பாவம்! உன் உடல் முழுவதும் இப்படி பட்டுவிட்டால்" அந்தப் பெண்ணை இறுகக் கட்டிக்கொண்டார் வசிட்டர்.

பர்ணசாலை பஞ்சபாணனின் வேடிக்கையிடமாயிற்று. பிரம்மாவின் புத்திரர், ரிஷி சிரேஷ்டர், ஆசா பாசங்களை நீக்கி அகோரத்தவம் செய்தவர், தாழ்ந்த குல மங்கை அட்சமாலையின் காலடியில் தாழ்ந்துகிடந்தார்.

ஐம்புலன்களை வென்றவர், இருந்தாலும் அழகிய மங்கையைக் கண்டால் வீழ்ந்துவிடுகிறார்; தவத்தில், யோகத்தில் ஈடுபட்டிருந்தவர், ஆனால் தனியே ஒரு பெண்ணைக் கண்டதும் தவம் மறந்துவிட்டது, யோகம் பறந்துவிட்டது. மேல் சாதி, கீழ்சாதி என்று சாதிகளைப் படைத்தவர் பிரமதேவர், அவருடைய மகனே அந்தச் சாதிகளின் பாகுபாட்டை முறித்துவிட்டார், காமமோகத்தில். மனிதரில் நான்கு சாதிகளில், ஒருவன் தனக்குக்கீழ்சாதியிலிருப்பவளை மணந்தால் சான்மலி எனும் நரகத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பு முட்களில் புரளவேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. வசிட்டர் மனிதர்களிலும் மேம்பட்ட தேவர் குலத்தவர், தேவர்களிலுள்ளும் மேலாக இருப்பவர், பிரமதேவனுக்கு அடுத்தபடியான நிலை, அவர் மனித குலப் பெண்ணை, அதிலும் மனிதர்களுக்குள் கடை வகுப்பாகப் படைக்கப்பட்ட அட்சமாலியை அணைத்துக்கொண்டார், அவருக்கு எந்த நரகமும் தண்டனையும் தரப்பட்ட

தாகத் தெரியவில்லை. மாறாக ரிஷிசிரேஷ்ட ரானார், சப்த ரிஷிகளில் ஒருவராக உயர்த்தப் பட்டார்.

தேவர்களுக்குள் உயர்ந்த வசிட்டர், மானிட குலத்தில் தாழ்ந்த சாதியினளை கைப்பற்றினார், ஏதோ அவசர தோஷம், யாருமில்லா இடம், கண்ணை மறைத்த காமம் என்று சொல்லலாம். ஆனால் புராணக் கதைகளை மேலும் பார்த்தால், வசிட்டர் மானிட குலத்தில் தாழ்ந்த சாதியை மட்டுமல்ல, மானிட குலத்துக்கும் தாழ்ந்த சாதியில் தன் காமக்கிழத்தியைத் தேடியிருக்கிறார்.

அட்சமாலிகையின்மீது தமது ஆசையைத் தீர்த்துக்கொண்டதும், வசிட்டர் அவளை விட்டு நீங்கி, வேறொரு காட்டுக்குச் சென்றார், தமது தவத்தை மேற்கொண்டு நடத்த. மனிதர்கள் யாராவது வந்தால், அதிலும் மனுஷிகள் யாராவது வந்தால்தானே தவத்திற்கு இடையூறு உண்டாகிறது என்று மனித சஞ்சாரமே இல்லாத காட்டை வசிட்டர் தேர்ந்தெடுத்தார். அங்கு மனிதர் யாரும் நடமாடமுடியாத படிக்கு சிங்கம், புலி, கரடி முதலிய கொடிய மிருகங்கள் உலவிக்கொண்டிருந்தன. கொடிய மிருகங்கள் சாதாரண மனிதர்களைப் பயமுறுத்தியபோதிலும், தவஞ்செய்ய வரும் முனிவர்களை ஒன்றும் செய்வதில்லை. தவசிரேஷ்டர்களுக்கும் புலி, சிங்கம், இவைகளால் இடையூறு உண்டாகாது, ஏதாவது மானினம்—அட்டசமாலிகைபோன்ற பெண்மான் வந்துவிட்டால்தான் ஆபத்து!

கொடிய மிருகங்கள் சூழ்ந்து நடமாடும் இடத்தில் வசிட்டர் மீண்டும் தவஞ்செய்யத் தொடங்கினார். இப்பொழுது எத்தகைய இடையூறும் இல்லாததால், அவரது தபோ வலிமை நன்கு வளர்ந்தது. பறவையினங்கள் அவர்மேல் வெய்யல் படாதிருக்கத் தழைகளை எடுத்துவந்து, மேலே பந்தல்போல் அமைத்து, நிழல் தந்தன. சிங்கம் தன் பிடரிமயிரால், அவருக்கு முன்னுள்ள இடத்தைக் கூட்டித் தூய்மையாக வைத்தது. மரங்களை அசைத்து, கனிவகைளைப் பொறுக்கிவந்து வைத்தது ஒரு கரடி. இவ்வாறு கொடிய மிருகங்கள் அந்தத் தபோதனருக்கு வேலையாட்கள்போலப் பணிவிடை செய்தன. ஓய்வாக இருக்கும்பொழுது, வசிட்டரின் பக்கத்தில் வந்து, வாலைக் குழைத்துக்கொண்டு சிங்கமும், புலியும் நிற்கும். வசிட்டர் அவற்றைத் தட்டிக்கொடுத்து அனுப்புவார். இப்படியாகத் தவசிரேஷ்டர், காட்டு வாழ்க்கையை நடத்திவந்தார்.

ஒரு நாள் மாலை, ஜபத்தை முடித்து, மான் தோலாசனத்தில் வசிட்டர் அமர்ந்திருந்தார். அப்பொழுது ஒரு புலி வந்து அவர் காலடியில் படுத்துக்கொண்டது. வழக்கம்போல் அதைத் தட்டிக்கொடுத்து, மிருதுவான முதுகைத் தடவிக்கொடுத்தார். திடீரென்று மறைந்து கிடந்த அட்சமாலிகையின் உருவம்—அவளுடைய கட்டுடலைத் தடவிக்கொடுத்தது—கூந்தலைக் கோதிவிட்டது—அவர் ஞாபகத்திற்கு வந்தது. பாவம்! தவக்கோலத்திலிருந்தாலும் மனதில் மூண்ட கனல் அணையவில்லை! நீறு பூத்துக் கிடந்தது, இப்பொழுது நினைவு தட்டிவிட, கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்தது. "அட்சமாலிகை! அட்சமாலிகை!" என்று பெருமூச்சுடன் கூவினார். யாருமற்ற அந்தக் காட்டில் அவர் குரல் காற்றில் கரைந்து சென்றது. அதுவரை தனித்திருந்து தவஞ் செய்தது, பெண்ணைப் பிரிந்து பெம்மானை வேண்டியது எல்லாம் வீண் எனத் தோன்றியது!

காமவேதனை தாங்காமல் வசிட்டர் எழுந்து நடமாடினார், ஆயிரம் நினைவுகள் தோன்றி மறைந்தன, அட்சமாலிகையைப் பற்றி அவளைப்போன்ற ஆரணங்குகளைப்பற்றி. காட்டில் நின்று, தனிமையாக அவற்றை நினைத்து என்ன பயன்? அவரைத் தவிர, பக்கத்தில் கிடக்கும் புலியைத் தவிர, வேறு யாரும் கிடையாது.

புலி! அது நீண்டு அமர்ந்திருக்கும் அழகை வசிட்டர் பார்த்தார். பக்கத்தில் அமர்ந்து அதன் முதுகைத் தடவிக்கொடுத்தார். அந்தப் புலி, ஒரு பெண்புலியாகும்! வசிட்டரின் காமவேதனை தாங்கமுடியாததாகியது. பெண் புலியை அணைத்துக்கொண்டார், உச்சி மோந்தார், முத்தங்கள் தந்தார்.......பின்........ தன் மனைவியாகவும் ஆக்கிக்கொண்டார்.

பிரமதேவனின் புத்திரர், ரிஷிசிரேஷ்டர், சப்தரிஷிகளில் ஒருவர், அவர் காமமோகத்தில், கேவலம் ஒரு மிருகத்தை—பெண்புலியை மருவினார் என்று புராணம் கூறுகிறது. மனிதரில் கடைசித்தர கசடனும் செய்யாத ஒழுக்கக்கேடு, தேவர்களில் உயர்ந்து விளங்குபவர் செய்திருக்கிறார். வசிட்டர்! அவர்தான்

சூரியகுலத்து அரசர்களுக்குக் குருவாக அமைந்தவர், அயோத்தி ராமனுக்கு ஆசிரியராக இருந்து கல்வி கேள்வி ஒழுக்கங்களைப் பற்றி உபதேசங்கள் செய்தவர். அவர் கதையைப் பார்த்தால், தாழ்ந்த குலப் பெண்ணாகிய அட்சமாலிகையை அணைந்திருக்கிறார், பெண் புலியை காமவேட்டையாடியிருக்கிறார். சே! வெட்கக்கேடான செய்தி!

மிருகத்தைப் பெண்டாக்கிக்கொண்டதில், வசிட்டர் வெட்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்தப் பெண் புலியுடன் வாழ்ந்து, மக்களையும் பெற்றிருக்கிறார். தாய் புலி, தந்தை தேவர், மக்களின் உருவம் எப்படியிருக்கும்? கைகால்கள் புலியைப் போலவும், முகம் தேவர்களைப் போலவும் குழந்தைகள்—அதாவது புலிக்குட்டிகள் பிறந்தன. அப்படிப் பிறந்த குழந்தைகள் ஒன்று இரண்டல்ல, பத்தொன்பது (19) ஆகும். அழகான மனைவியை அடைந்த மனிதனுக்குக்கூட ஐந்தாறு குழந்தைகள் பிறந்ததும் கொஞ்சம் அலுத்துவிடும். இந்த முற்றுந் துறந்த முனிவர் பெருமானுக்கு மிருகத்திடம் வைத்த காதல் 19 குழந்தைகள் பிறக்கும்வரை மங்கியதாகத் தெரியவில்லை. பாவம்! அந்தப் பெண்புலி, கிழடாகி, மலடாகிப்போகும்வரை வசிட்டர் தொல்லை கொடுத்தவண்ணமிருந்திருக்கிறார் போலும்!

வசிட்டருக்குப் பெண்புலியிடத்து உண்டான புதல்வர்களில் மூத்தவர் வியாக்கிரபாதர் என்பவராகும். வியாக்கிரம் என்பது புலியைக் குறிக்கும் பெயர். புலியின் பாதங்களைப் பெற்றிருந்ததால், அவர் வியாக்கிரபாதர் என அழைக்கப்பட்டார். தாய் புலியாகவும், தந்தை தேவராகவும் இருந்ததால், வியாக்கிரபாதருக்குக் கைகால்கள் புலியைப்போலவும் முகம் தேவர்களைப்போலவும் அமைந்தன.

காமவேட்டையில் கடைத்தர செய்கையில் ஈடுபடுவது மட்டுமல்ல, சமயம் நேர்ந்தால் களவாடவும் வசிட்டர் பின்வாங்கியதாகத் தெரியவில்லை. ஒருசமயம் வசிட்டர் மூன்று நாள் உபவாசம் இருந்தார். உபவாசம் முடிந்ததும், கடுமையான பசி உண்டாயிற்று. அதைத் தீர்த்துக்கொள்ள அவரிடம் உணவு கிடையாது. மூன்று நாள் பட்டினி, அகோரப் பசி, முனிபுங்கவரைத் தாக்கிற்று. உணவு தேடினார். பக்கத்தில் எங்கும் கிடைக்கவில்லை. கடைசியாக வருணன் மாளிகைக்கு வந்தார். வருணன் மழைக்கு அதிபதி. மழையால்தான் உணவுப்பொருள்கள் உண்டாகின்றன. எனவே வருணன் மாளிகையில் உணவுப்பொருள்கள் வேண்டுமளவு குவிந்துகிடக்கும். அவனிடம் வந்து வசிட்டர் வெளிப்படையாக "தானியம் வேண்டும்!" என்று கேட்டிருந்தால், அட்டியின்றி அவன் கொடுத்திருப்பான். ஆனால் ஐம்பார்! முற்றும் துறந்த முனிவர் எதையும் கேட்கக் கூடாதே! எனவே வருணனிடம் அவர் தானியத்தை கேட்கவில்லை. "இன்றிரவு உறங்க இடம்தா!" என்றுமட்டும் கேட்டார். வருணனும் மாளிகையில் நல்ல அறையை ஒதுக்கி, அவரை இருக்கச் செய்தான். உறங்கப் போவதுபோல பாவனை செய்து, வசிட்டர் படுக்கையில் படுத்திருந்தார்.

நள்ளிரவு. வருணனின் மாளிகையில் எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்தனர். வசிட்டர் மெதுவாக எழுந்தார், தானியக் கிடங்கை நோக்கி நடந்தார். காவலாளிகள் உறங்கிக் கொண்டிருந்தனர். தானியக்கிடங்கு காவலற்றுக் கிடந்தது. அடிமேல் அடிவைத்து, தானியக்கிடங்கருகில் வசிட்டர் வந்தார். கடைசி நேரத்தில் எங்கிருந்தோ 'ளொள்' என்ற கூச்சலுடன் ஒரு நாய் அவர்மேல் பாய்ந்துவந்தது!

எவ்வளவு சங்கடமான நிலை! முற்றுந் துறந்த முனிபுங்கவர், ரிஷி சிரேஷ்டர், நள்ளிரவில் கள்ளனாக மாறிவிட்டார் என்பதைக் கண்டால்! விருந்தாக வந்தவர், மாளிகையில் நுழைந்ததும் திருடனாக ஆகியதை யாரும் பார்த்துவிட்டால்! உலகங்களை, உயிர்களை, மரஞ்செடிகளை, தானியங்களை, திரவியங்களை எல்லாம் படைத்தவர் பிரமதேவன். அவருடைய மகன் இங்கே உணவுக்கு வேண்டிய தானியத்துக்காகத் திருடப் புறப்பட்டுவிட்டார் என்றால், எவ்வளவு கேவலம்! அதிலும் திருட முனைந்தது மட்டுமல்ல, தன்னை வரவேற்றுப், பாதுகாப்பளித்த, நண்பனின் வீட்டில், திருடுவதென்றால், நம்பிக்கைத் துரோகமும்கூட! திருடன்கூட தனக்கு நண்பனாயிருப்பவனிடம், தனக்கு ஆதரவு காட்டியவனிடம் களவாட நினைக்கமாட்டான். ஆனால் இவர் முற்றுந் துறந்த முனிவராயிற்றே, தன்னை ஆதரித்த நண்பனின் மாளிகையில் திருடப்போனார்; காவல் காத்துவந்த நாய் அவரைக் கண்டுபிடித்துக் குரைத்தது!

(தொடரும்)

இயற்கையை ஒட்டியதே ஒழுக்கம்

[இரா. நெடுஞ்செழியன்]

மனிதன் இயற்கையின் வளர்ச்சியுற்ற ஒரு கூறுபாடாக விளங்கினாலும், அவன் இயற்கையின் மற்ற கூறுபாடுகளின் கூட்டுறவால் வளரவும் அழியவும் செய்கிறான். இயற்கையின் மற்ற கூறுபாடுகள் அவனுக்கு ஓயாமல் பாடம் கற்பித்தவண்ணமிருக்கின்றன.

ஒவ்வொரு மனிதனின் மூளையும், இயற்கைக்கு ஒரு விளைநிலமாகவே காட்சியளிக்கிறது. இயற்கை, தன் கருத்து விதைகளை அதில் தூவிக்கொண்டேயிருக்கின்றது. அந்தக் கருத்துவிதைகள் சில மூளைகளில் வளமாகச் செழித்துவளர்கின்றன; வேறு சில மூளைகளில் விரைவில் பட்டுப்போய்விடுகின்றன. விளை நிலங்களில் சில வளமாகவும், சில வறட்சியாகவும் இருப்பதைப் போலவே சில மூளைகள் வளமாகவும், சில மூளைகள் வறட்சியாகவும் இருக்கின்றன.

இயற்கைச் சூழ்நிலைகள் மனிதனுக்குச் சிந்தனைக் களஞ்சியங்களாகும். பூத்துக் குலுங்கும் மலர்கள், வீசும் காற்றோடு தம் மணத்தைக் கலந்து, மனிதனின் உள்ளத்திலே எப்பொழுதும் மகிழ்ச்சியை ஊட்டிக்கொண்டிருக்கின்றன. பாட்டிசைக்கும் வண்டுகள் அவனுக்கு இன்பத்தைச் சொரிந்தவண்ணமிருக்கின்றன. ஓயாமல் ஓசையிடும் கடலின் அலையும், இன்னிசை பாடும் நீர்வீழ்ச்சியும், முழக்கமிடும் இடியும், தாலாட்டு இசைக்கும் சிற்றோடையும் ஒலிகள் எழுப்பும் இலைகளும், காதல் பண்பாடும் பறவைகளும் மனிதனின் உணர்வை ஈர்க்கின்றன. அவைகளின் காரணமாக மனிதன் சில வேளைகளில் இன்பத்தில் ஆழ்கிறான்; வேறு சில வேளைகளில் வருத்தத்தில் அமிழ்கிறான்; விருப்பத்தில் மிதக்கிறான்; காதலின்பத்தில் தவழ்கிறான்; மெய்மறந்துபோகிறான்.

மனிதன் தன்னைச் சுற்றிலும் உள்ள ஒவ்வொன்றிலும், தன் சிந்தனை வளர்ச்சிக்கான கருத்து விதைகளையும், அறிகுறிகளையும் காண்கிறான். மலையிலும் மடுவிலும், பனிவெளியிலும் பாழ் நிலத்திலும், வான் பரப்பிலும் வட்ட நிலவிலும், நட்சத்திரக் குவியல்களிலும் நதிகளின் தீரத்திலும், மூடுபனியிலும் முகிற் கூட்டத்திலும், புயலிலும் புழுதியிலும், அமைதியிலும் ஆரவாரத்திலும், பகலிலும் இரவிலும், காடுகளிலும் மேடுகளிலும், புல்லிலும் புதரிலும், இருளிலும் ஒளியிலும், கடுமையிலும் செம்மையிலும், வண்ணத்திலும் சுண்ணத்திலும், வாழ்விலும் சாவிலும், நீர்வாழ்வன வற்றிலும் நிலமூர்வனவற்றிலும், பறவையினங்களிலும் விலங்கினங்களிலும், மிதப்பனவற்றிலும் நீந்துவனவற்றிலும், நடப்பனவற்றிலும் நகர்வனவற்றிலும், ஆடுவனவற்றிலும் அசைவனவற்றிலும், எல்லாவிதத் தோற்றங்களிலும், எல்லாவிதப் பண்புகளிலும் மனிதன் சிந்தனைக்கான விதைகளைக் காண்கிறான். மனிதன் சிந்திக்கும் சிந்தனைகளெல்லாம், இயற்கையின் ஒரு கூறுபாடாகவே இருக்கின்றன. இந்தச் சிந்தனைகள் புதிய கண்டுபிடிப்புகள் பல தோற்றங்கொள்வதற்குக் காரணமாகிவிடுகின்றன.

இயற்கை மனிதனின் உள்ளத்தை எப்படிக் கிளறுகிறதோ அப்படியே மனிதன் கண்டுபிடிக்கும் செயற்கையும் உள்ளத்தைக் கிளறுகிறது. அருவியின் ஓசை மனிதனுக்கு உள்ள நெகிழ்ச்சியைத் தருவதைப்போலவே, கிரேக்க நாட்டுப் பளிங்குச் சிலைகளும் மனிதனுக்கு உள்ள நெகிழ்ச்சியைத் தருகின்றன. சிறப்புவாய்ந்த

இலக்கியங்களும், பேர்போன ஓவியங்களும், வியப்புக்குரிய கண்டுபிடிப்புகளும், அரிய கோட்பாடுகளும், சீரிய தத்துவங்களும் மனிதனின் உள்ளத்தைச் சிறிதுசிறிதாக விரிவாக்கி, உருப்படுத்துகின்றன. எல்லாம் இயற்கைதான்! காண்பனவெல்லாம், நிகழ்வனவெல்லாம், அறிவனவெல்லாம் இயற்கையே! எல்லாம் இயற்கையிலேயே உற்பத்தியாக்கப்படுகின்றன! இயற்கையின் எல்லைக்கு அப்பால் மனிதன் போக முடியாது!

அப்படியிருந்தும் மனிதன், பலகாலங்களாக, பல்வேறு வழிகளிலும் இயற்கைக்கு மீறிய ஆற்றலை நம்பி வாழவே செய்தான்; இயற்கைக்கு மீறிய ஆற்றல் உண்டு என்பதை உண்மையாக நம்பவே செய்தான். இயற்கைக்கு மீறிய ஆற்றல் ஒன்று எங்கேயோ உட்கார்ந்து கொண்டு, இயற்கையைத் தன் விருப்புவெறுப்புக்கேற்றபடி, சமயத்திற்குத் தகுந்தாற்போல் ஆட்டிப் படைக்கிறது என்று எண்ணிவந்தான். இயற்கையின் ஒரு தன்மையான விதிகளில் அவனுக்கு நம்பிக்கை இல்லை; காரண காரிய விளக்கத்தைப் பற்றி அவன் கவலைப்பட்டதில்லை; இயற்கையாற்றலை அழிக்கமுடியாது என்பதிலும் அவனுக்கு அக்கரை பிறந்ததில்லை. இயற்கையாற்றலைத் திருத்தவோ, மாற்றவோ செய்யலாமேயொழிய, அதனை மிகுதிப்படுத்தவோ குறைக்கவோ முடியாது என்பதை அவன் அறிந்ததில்லை.

மருத்துவத் துறையில் மந்திரம், ஜெபம், தாயத்து, சூன்யம் ஆகியவைகளில்தான் காட்டுமிராண்டி நம்பிக்கை வைத்திருந்தான். அவைகள் தாம் நோய்களைப் போக்கும் என்று எண்ணி வந்தான். நோய்களெல்லாம் இயற்கையானவை என்பது அவனுக்குப் பட்டதேயில்லை. இயற்கைக்கு மீறிய ஆற்றல் படைத்த பேய், பூதம், பிசாசு ஆகியவைகளால்தான் அவை உண்டாக்கப்படுகின்றன என்று அவன் கருதி வந்தான்.

இரசாயனத்துறையில் அவன் காயகல்பத்தையும், மந்திரக்கோலையும், உலோகத்தைத் தங்கமாக்கும் ரஸவாதத்தையும் நம்பினன்.

பொறியியல் துறையில் மந்திரசக்தியே எல்லாவற்றையும் அசைவிக்கும், மந்திர சக்தியின் மூலம் எதனையும் இயக்குவிக்கலாம், எதையும் செயலற்றுப்போகச் செய்யலாம் என்று நம்பினன்.

அரசியல் துறையில் இயற்கைக்கு மீறிய ஆற்றலே ஆதிக்கம் செலுத்துவதாகவும், அதுவே அன்றாட நடவடிக்கைகளையெல்லாம் நடத்துவதாகவும் காட்டுமிராண்டி மனிதன் நம்பினன்.

மனிதன் பல நூற்றாண்டுகாலம் வரையிலும் அவனே கற்பித்துக்கொண்ட இயற்கைக்கு மீறிய ஆற்றலுக்கு அதாவது கடவுளுக்கு அடங்கி நடப்பதையே சிறந்த ஒழுக்கமாகக் கொண்டிருந்தான். இயற்கையில் காணப்படும் உண்மைகளுக்கு அவன் அவ்வளவாக மதிப்பு கொடுக்க விரும்பவில்லை. இயற்கை உண்மைகளைவிட, கற்பித்துக்கொண்ட இயற்கைக்கு மீறிய கற்பனைகளிடத்தே அவன் அதிக மதிப்பு வைத்திருந்தான். மனிதன் தனக்கும்தான் கற்பித்துக்கொண்ட இயற்கைக்கு மீறிய ஆற்றலுக்கும் உள்ள தொடர்பினைப்பற்றிப் பலவேறு விதமாக கற்பித்துக்கொண்டான். அத்தகைய தொடர்பு மதம் எனக் கொள்ளப்பட்டது. பன்னெடுங் காலமாக, காணமுடியாத, உணர முடியாத ஆனால் நம்பப்படும் கடவுளைப்பற்றிப் புகழவும், அக்கடவுளை வழிபடவுமே, மதம், பெரும்பாலும் நிலவிவந்தது. மதம், மனிதனுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பைப்பற்றிக் கூறிற்று என்றாலும், கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பையும், கடவுளுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பையும் மட்டுமே அது விரிவாகவும் விளக்கமாகவும், ஆர்வத்தோடும் அக்கரையோடும் கவனித்துவந்தது என்னலாம். மனிதன் இவற்றிற்கெல்லாம் நம்பிக்கையின்பாற்பட்ட பக்தியை அடிப்படையாகக்கொண்டானேயல்லாமல், ஆராய்ச்சியின் பாற்பட்ட உண்மையறிவை அடிப்படையாகக் கொள்ளவில்லை.

மனிதன் அனுபவத்தின் மூலமாகவும், ஆராய்ச்சியின் வாயிலாகவும், சில பொழுது தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சியின் துணைகொண்டும் நோய்களை இயற்கையாகப் போக்க முடியும் என்பதை நாளடைவில் கண்டுகொண்டான். சிலவித தழைகளைக் கொண்டும், சிலவித பட்டைகளைக்கொண்டும் நோய்களைத் தீர்க்கமுடியும் என்பது அவனுக்குப்பட்டது. பல்வேறு வாய்ப்புகளில் அதன் உண்மையைத் தெளிவாக அறிந்துகொண்டான். கற்பனைக்

கடவுளின் துணையைவிட, சுற்றுச் சூழ்நிலை இயற்கையின் துணை அவனுக்கு உறுதியாக நன்மையளிப்பதை நடைமுறையில் தெரிந்து கொண்டான். இயற்கையின் ஆற்றல்களிலே தெளிவு ஏற்பட ஏற்பட, மந்திரம் தாயத்துக் களிலே அவனுக்கிருந்த நம்பிக்கை சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டது. இயற்கை யாற்றல்களுக்கும் கற்பனையாற்றல்களுக்கும் இடையே பல நூற்றாண்டுகள் போர்கள் நடைபெற்றன. கற்பனை யாற்றல்கள், இயற்கை யாற்றல்களுக்கு இடமளிக்காமல், தாமே நின்று நிலவவேண்டும் என்று ஆனமட்டும் பாடுபட்டுப்பார்த்தன. இறுதியில் இயற்கையாற்றல்கள் தாம் வெற்றிபெற்றன. கற்பனையாற்றல்கள் தம் போலி உருத்தோற்றத்தை மறைத்துக் கொண்டு ஓடி ஒளிய ஆரம்பித்தன. இப்பொழுது உலகில் உள்ள எல்லோரும் அறிந்து கொண்டிருக்கிறார்கள், நோய்கள் இயற்கையாகவே ஏற்படுகின்றன என்பதையும், இயற்கையின் துணைகொண்டே அவைகளைப் போக்கிட முடியும் என்பதையும், இயற்கையில் காணப்படும் உண்மைகளின் அடிப்படையிலே அவையெல்லாம் நிகழ்கின்றன என்பதையும். மந்திரம், தந்திரம், தாயத்து, ஜெபம் ஆகியவற்றால் நோய் எதுவும் தீராது என்பதை இப்பொழுது உலகோர் அனைவரும் தெரிந்து கொண்டுவிட்டார்கள். நோய்களைத் தீர்க்க இயற்கையை மீறிய சிகிச்சைகள் இருப்பதாக அறிவுடையோர் யாரும் இப்பொழுது ஒப்புவதில்லை.

இரசாயனத் துறையிலும் இப்பொழுது எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. அறிவியலுக்கும், மதக் கற்பனைகளுக்கும் ஏற்பட்ட பெரும்—கடுமையான போர்களுக்குப் பிறகு, பல நூற்றாண்டுகள் உருண்டோடிய பிறகு இறுதியில் அறிவியல் வென்றது. மனிதன் எவ்வளவுதான் முயன்றாலும், சாவா வரத்தோடு வாழலாம் என்று இப்பொழுது எந்த அறிவுபடைத்தவரும் எண்ணமாட்டார்கள். காயகல்பத்தினால் ஒரு பலனும் கிடையாது என்பதை எல்லோரும் புரிந்துகொண்டுவிட்டார்கள். இந்த நாட்களில் ஏதொன்றையும் இயக்குவிக்க யாரும் மந்திரக்கோலை நாடுவதில்லை. இரசாயனத்துறையில் இயற்கைக்கு மீறிய கற்பனை ஆற்றலுக்கு இடமில்லை என்பதை எல்லோரும் தெளிவாக அறிந்துகொண்டிருக்கிறார்கள். எல்லாப்பொருள்களும் அவ்வவற்றிற்கு அமைந்த இயற்கைத் தன்மைகளிலேயே திகழ்கின்றன என்பதையும், ஒரு பொருளின் அணுக்கள் வேறொரு பொருளின் அணுக்களோடு எந்தவகையான இயற்கைத் தன்மையில் தொடர்பு கொள்ளுமோ, அதே வகையான இயற்கைத் தன்மையில்தான் தொடர்புகொள்ளுகின்றன என்பதையும் இது நாளில் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். இயற்கைக்கு மீறிய அற்புதம் என்பது இரசாயனத்துறையைவிட்டு ஓடிவிட்டது. அற்புதத்திற்குக், கற்பனைக்கு, ஏமாற்றுதலுக்கு, பொய்மைக்கு, மூடநம்பிக்கைக்கு இடமளிக்காத அறிவியல், அந்த இடத்தை இப்பொழுது பிடித்துக்கொண்டிருக்கிறது.

இயற்கை தன்னுடைய தன்மைகளில், அப்படியே நிலைத்து நிற்கின்றதேயல்லாமல், இயற்கைக்கு மீறியவாற்றலின் விருப்புவெறுப்புக்கு ஏற்றவாறு ஆடுவதில்லை என்பதை நாமெல்லாம் இதுநாளில் தெளிவாக அறிந்திருக்கிறோம். இயற்கையின் ஒருமைத்தன்மையில் நாமெல்லாம் பற்றுக்கோடு வைத்திருக்கிறோம். உலகத்தின் இழுப்பாற்றல், நேரத்திற்குத் தகுந்தாற்போல் எப்படி மாறுவதில்லையோ, வட்டத்தின் சுற்றளவுக்கும் குறுக்களவுக்கும் உள்ள தொடர்பு வட்டத்திற்கு வட்டம் எப்படி வேறுபடுவதில்லையோ அப்படியேதான், ஒவ்வொன்றிலும் ஒன்றியிருக்கும் இயற்கைத் தன்மையும் ஒருமைத்தன்மையுடையதாகவே இருப்பதையும் காண்கிறோம். இயற்கை அதன் விதிகளில் கிஞ்சிற்றும் வேறுபடுவதில்லை, விதித்துக்கொண்ட விதிப்படியே அது இயங்கிவருகிறது என்பதை எல்லோரும் தெளிவாக அறிந்திருக்கிறோம்.

பொறியியல் இயற்கை விதிகளை ஒட்டிதான் இயங்குகின்றதேயொழிய, இயற்கைக்கு மீறிய வாற்றலின் துணையை அவ்வப்போது தன் விருப்பத்திற்கேற்றவாறு பெற்றுக்கொண்டல்ல. மனிதன் இயற்கைக்குத் தெரியாத ஆற்றல் ஒன்றை உற்பத்தியாக்கவும் முடியாது; உண்டாகியிருக்கும் இயற்கையின் ஆற்றல் ஒன்றை அழித்துவிடவும் முடியாது. இயற்கைக்கு மீறிய கற்பனைக் கடவுளின் உதவியை எதிர்பார்த்தோ அல்லது கேட்டுப்பார்த்தோ எந்த நல்ல பொறியியல் அறிஞனும் இருப்பதில்லை. இயற்கையில் காணப்படும் சில உண்மைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு

தான், தான் வேலை செய்கிறோம் என்பதையும், அந்த உண்மைகளில் எதனையும் தன்னால் அழிக்கமுடியாது என்பதையும் உணர்ந்துதான், நல்ல பொறியியலறிஞன் வேலை செய்கிறான்.

அதுபோலவே இன்றைய உலகில் உள்ள ஆட்சிகளெல்லாம் ஆண்டவனால் ஆளப்படுகின்றன என்பதை எவரும் மனமார ஒப்புக்கொள்வதில்லை. நாடாளும் உரிமையும், சட்டங்கள் இயற்றும் உரிமையும், அவற்றை நடைமுறைக்குக்கொண்டுவரும் உரிமையும் ஆளப்படும் மக்களால் வழங்கப்படுவனவாக உலகிலுள்ள எல்லா நாடுகளும் கருதுகின்றனவே யொழிய, ஆண்டவனால் வழங்கப்படுவனவாக யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. கற்பனைக் கடவுளின் அனுமதி பெற்றுத்தான் உலகிலுள்ள ஆட்சித்தலைவர்களெல்லாம் ஆட்சிபீடம் ஏறியிருக்கிறார்கள் என்பதை இந்தக்காலத்தில் யாரும் நம்பமாட்டார்கள்; நாமும் நம்பமாட்டோம். அதுபோலவே கற்பனைக் கடவுளின் விருப்பத்திற்கிணங்கதான் மக்களில் சிலர் அடிமைகளாகவும், விலைக்கு வாங்கப்பட்டவர்களாகவும், வேலைக்காரர்களாகவும் ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் இதுநாளில் ஏற்கமாட்டோம்.

எனவே கற்பனைக் கடவுளை நம்பி, அவரை வழிபட்டு, அவரது வேத புராண இதிகாச சாஸ்திரங்களில் கூறப்பட்டவையே ஒழுக்க மேம்பாட்டிற்கான கருத்துகள் எனனும் கொள்கை, இப்பொழுது அடியோடு மாறிவிட்டது என்னலாம். மனித சமுதாயத்திற்கு எது மகிழ்ச்சியையும், நன்மையையும் பயக்குமோ, அதுதான், ஒழுக்க மேம்பாட்டிற்கான கருத்து என்பது, இப்பொழுது உறுதிபெற்றுவிட்டது. காரணமின்றி வழிபட்டு அடங்கி நடப்பது, ஒழுக்கத்திற்கான அடிப்படை ஆகாது. அது மன அடிமைத்தனத்தின் விளைவு ஆகும். மன மகிழ்ச்சியில் ஒருவன் ஈடுபட்டு, அவன் அதில் திளைத்திருக்கவேண்டுமாயின், அவன் விடுதலையுணர்வோடும், பெருந்தன்மையோடும் வாழ வேண்டும். காரணகாரியமின்றி ஒருவன் வழிபட்டடங்குவது என்பது அடிமை மனப்பான்மையைக் காட்டும் ஒரு செயலாம். உண்மையான ஒழுக்கமேம்பாடு என்பது விடுதலையும், அறிவுடைமையும் ஈன்றிடும் பூவாகும்; அவையே ஈன்றிடும் கனியுமாகும்.

உண்மையான சமயநெறிக்கும், இயற்கைக்கு மீறிய கற்பனையாற்றலுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்று கூறிடும் நிலைக்கு இப்பொழுது பலர் வந்துவிட்டார்கள். சான்றுகள் இல்லாமலும் அல்லது சான்றுகளுக்கு மாறுபாடாகவும் எதனை நம்பும் நிலை உண்மையான சமயநெறியைச் சார்ந்ததல்ல என்று கூறிடத் தொடங்கிவிட்டார்கள். காணாத ஒன்றை வழிபடுவதோ அல்லது எல்லையற்ற ஒன்றுக்கு உதவி செய்வதோ உண்மையான சமயநெறி அல்ல என்று புகன்றிடவும் ஆரம்பித்துவிட்டார்கள். இயற்கைக்கு மீறிய கற்பனை ஆற்றலோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ள விழாக்கள், வழிபாட்டுரைகள், வேதங்கள், அதிசயங்கள், அருட்செயல்கள், கதைகள், திருவிளையாடல்கள் ஆகியவைகள் உண்மையான சமயநெறிக்குப் புறம்பானவையாகும் என்றுகூடச் சொல்லத்தொடங்கிவிட்டார்கள். இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன என்றால், பகுத்தறிவு அடிப்படையில் காணப்படும் இயற்கை யாராய்ச்சிக்கு முன்னால், மதக் கற்பனைகளெல்லாம் ஓடி ஒளிந்து மறைகின்றன என்பதையே யாகும். அறிவியல், மதத்தின் கோரப் பொய்ப் பற்களைச் சிறிதுசிறிதாகப் பிடுங்கிவருவதைத் தான் மனித சமுதாய வளர்ச்சி நாளடைவில் காட்டிவருகிறது.

ஒவ்வொரு அறிவியல் துறையும், இயற்கையின்மீதும், ஆராய்ந்து காணப்பட்ட உண்மைகளின்மீதுந்தான் நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றது. எனவேதான் ஒழுக்கமேம்பாடும், வாழ்க்கை நெறியும் இயற்கை ஆற்றல்களின் மீது எழுப்பப்படவேண்டியவைகளாக இருக்கின்றன.

'மன்றம்' சிலோன் ஏஜண்டுகள்

1. விஜயா டிரேடிங் கார்ப்பொரேஷன்.
109, நியூ மூர் தெரு,
கொளும்பு-12.

2. ஜி. ராமசாமி
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம், சிலோன்.

பண்டைத் தமிழக நாணயச் செலவாணி

காட்டுமிராண்டிக் காலத்தில் மனிதன் தனக்குத் தேவையான பொருள்களைத் தானே தேடிக்கொள்ளவேண்டியவனாக இருந்தான். அவனுக்கு அன்றாடத் தேவைகளாகக் கருதப்பட்ட காய், கனி, கிழங்கு, சருகு, இறைச்சி, குருதி, நீர் நெருப்பு, தோல், கோல், ஆயுதம் ஆகியவைகளை அவனேதான் தேடிக்கொண்டான். பிறகு நாளடைவில், ஒருவன் தேடிக்கொண்டுவந்த பொருள்களில் அவனுக்குத் தேவையானவைபோக மீதியை தனியே விட்டுவிடவும், அவற்றைத் தேவையானவர்கள் எடுத்துக்கொள்ளவும் ஆன நிலை ஏற்பட்டது. திறமையுள்ளவர்கள் தேடிக் கொண்டுவந்த பொருள்களைத் திறமையற்றவர்கள் திருடிக் கொள்ளும் தன்மையும் ஏற்பட்டது. பலரை அடக்கி ஆளக் கற்றுக்கொண்டவன் அவர்களின் உதவியால் தனக்குத் தேவையான பொருள்களைத் திரட்டிக்கொள்ள முற்பட்டான். மனிதர் கூட்டம் சமுதாயமாக வளர்ந்து ஒருவர்க்கொருவர் அன்பும், பரிவும் காட்டிக்கொள்ளும் நிலை ஏற்பட்டபோது, பொருள்களை மிகுதியாகத் தேடிக்கொள்ளும் வாய்ப்புடைய பொருளுடையவன், பொருள்களைத் தேடிக்கொள்ளமுடியாத பொருளற்றவனுக்குச் சிறிதளவு கொடுக்க முற்பட்டான். சிதறுண்டு தனித்தனியாகத் திரிந்துகொண்டிருந்த மக்கள், ஓரிடத்தில் சேர்ந்து கூடி வாழக் கற்றுக்கொண்ட பின்னர். நாகரிகம் வளரவளர ஒரு பொருளை மிகுதியாக உடையவர் அந்தப் பொருளை மற்றவர்க்குக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக மற்றவரிடத்தில் மிகுதியாக உள்ள பொருளை வாங்கிக்கொள்வது என்ற பழக்கம் ஏற்பட்டது. தன்னிடத்திலுள்ள தேவையற்ற பொருளைப் பிறர்க்குக் கொடுத்துவிட்டுப் பிறரிடத்திலுள்ள தேவையான பொருளைப் பெற்றுக்கொள்வது என்னும் பண்டமாற்று முறை நாளடைவில் வழக்கத்திற்கு வந்தது. நாகரிகம் வளர்ந்த எல்லா நாடுகளிலும், தொடக்க காலத்தில், பண்டமாற்று முறைதான் நடைமுறையில் இருந்து வந்தது.

தேவையற்ற பண்டங்களைக் கொடுத்துவிட்டுத் தேவையான பண்டங்களைப் பெற்றுக் கொள்வது என்ற முறையிலும் நாளடைவில் மாறுதல் ஏற்பட்டது. எந்தப் பண்டத்தை எவ்வளவு கொடுப்பது, அதற்கு மாறாக எந்தப் பண்டத்தை எவ்வளவு பெற்றுக்கொள்வது என்னும் மதிப்பீடுமுறை வழக்கத்தில் வந்தது. பண்டங்களின் உற்பத்தியின் அளவு அவைகளின் தேவை ஆகியவற்றைப் பொறுத்து, பண்டத்திற்குப் பண்டம் மதிப்பீடு வகுக்கத் தலைப்பட்டனர். இந்த முறை பன்னெடுங் காலம் வரையிலும், எல்லா நாகரிக நாடுகளிலும் முழுக்க முழுக்க இருந்துவந்தது என்னலாம்.

நாகரிக வளர்ச்சி ஏற்பட ஏற்பட பண்டத்திற்குப் பண்டம் மதிப்பீடு வகுத்துக்கொண்டிருப்பது சிறிது கடினமாகப்படவே, ஏதாவது ஒரு பொருளை நிலைத்து மதிப்பீடு கருவியாக வைத்துக்கொண்டு, அதன்மூலம் பொருள்களை வாங்கவும் கொடுக்கவும் செய்வது எளிமையாக இருக்கும் என்று காணப்பட்டது. அப்படி நிலைத்த மதிப்பீடு கருவியாகக் கருதப்பட்ட பொருள் நாணயம் என்று பெயர்பெறுவதாயிற்று. நாணயம் என்பதைப் பண்டைத் தமிழர்கள் காசு என்று வழங்கினர்.

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட காலந்தொட்டே பழந்தமிழ் மக்கள் காசினைக் கண்டுபிடித்துவிட்டார்கள். அந்தவகையில் உலக மக்கள் எல்லாரைக் காட்டிலும் பழந்தமிழ்

மக்கள் நாகரிக மேம்பாடு உற்றிருந்தனர் என்று தெரியவருகிறது.

ஆரம்ப நாட்களில் கல், நெல், கட்டை, கொட்டை, தோல் கொம்பு போன்றவைகள் பல்வேறு நாடுகளிலும் நாணயமாக வழங்கப் பட்டன. பின்னர் படிப்படியாக அவைகள் மறைந்து, தாது (கனி)ப் பொருள்கள் நாணய மாக வழங்கத் தலைப்பட்டன. பழம் பெருங் காலந்தொட்டே தமிழர்கள் தாதுப்பொருள் களில் மிகச்சிறந்ததாகவும், உயர்ந்ததாகவும் கருதப்படும் பொன்னையே காசாகக்கொண்டு வாழ்ந்துவந்திருக்கின்றனர். பழந்தமிழகத்தில் பொன் ஏராளமாகக் கிடைத்ததாலும், பழந் தமிழர்கள் நாகரிகத்தில் மிகச்சிறந்து விளங்கிய தாலும் பொன்னைக் காசாகக் கொள்ளும் அள வுக்கு மேம்பாடு எய்தியிருந்தனர்.

உலோகங்களில் மிகச்சிறந்ததாகவும், மிக மதிப்புள்ளதாகவும் பொன் விளங்கியதால், அந்தச் சிறப்புடைய பெயரையே உலோகங்கள் எல்லாவற்றிற்கும் பொதுப் பெயராகவும் கொள்ளப் பண்டைத் தமிழ் மக்கள் தலைப்பட் டனர். ஆகையினால்தான் வெள்ளி, செம்பு, இரும்பு ஆகியவற்றை முறையே வெண்பொன், செம்பொன், கரும்பொன் என்று வழங்கி வந்தனர்.

பொன் உறுதியுடையதாகவும், எவ்வளவு காலம் சென்றாலும் தன்மை குன்றாததாகவும், குளிர்—காற்று—வெப்பம்—நீர்— நெருப்பு ஆகியவற்றால் பாதிக்கப்படாததாகவும், எவ்வ ளவு துண்டுகளாகச் சிதைத்தாலும் அவற்றிற் குரிய மதிப்பை இழக்காததாகவும், எந்த உரு வில் கொண்டாலும் ஒரே மதிப்பு உடையதாக வும், உலகமக்கள் எல்லோராலும் ஒருபடியாக மதிக்கக்கூடியதாகவும், மிகச்சிறிய அளவின தாகக்கொண்டு எல்லாப் பொருள்களையும் மதிக்கக்கூடிய பெரு மதிப்பினதாகவும், கையகப்படுத்துவதற்கு ஏற்றதாகவும், ஓரிடத் திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்கு ஏற்ற எளிமை யுடையதாகவும், ஒன்றை அரை, கால், அரைகால், வீசம் என்று வெட்டி மதிப்பிடு செய்வதற்கு ஏற்றதாகவும், கண்ணால் பார்ப்பதற்கு—கையால் தொடுவ தற்கு இன்பம் பயப்பதாகவும் இருப்பதால், பண்டைத் தமிழ் மக்கள் அதனைப் பரிமாற்றுக் கருவியாகக் கொண்டார்கள். இன்றைய நிலை யிலும், உலகிலுள்ள நாடுகளெல்லாம், பொன் னைத்தான் சிறந்த பரிமாற்றுக்கருவியாகக் கொண்டிருக்கின்றன என்பது ஈண்டு கூர்ந்து கவனிக்கற்பாலதாகும்.

பண்டைத் தமிழகத்தில் பொன் காசுகளை இப்போதுள்ளவைபோன்று முத்திரையிட்ட தகட்டு வடிவமாகக் கொண்டிருக்கவில்லை. உருண்டையான குண்டு வடிவத்தில்தான் பொன் காசுகள் வழங்கப்பட்டன. கொட்பயிறு, குன்றிமணி, மஞ்சாடிவிதை, கழற்சிக்காய் முதலிய பல பொருள்களின் நிறையுள்ளன வாய்க் குண்டு வடிவத்தில் பல்வேறு பொற் காசுகள் வழக்காற்றில் இருந்துவந்திருக்கின் றன. இப்படிப்பட்ட காசுகளைக் கட்டி நாண யம் என்று கூறுவார்கள். பொன்காசு உருண்டை வடிவில் அமைந்திருந்தது என்ப தைச் சங்ககாலப் புலவர் ஒருவரின் கூற்று நன்கு தெளிவுபடுத்துகிறது. பறவையின் அல கில் வேப்பங்கொட்டை எப்படிக் கவ்வப்பட் டிருக்குமோ, அதுபோல பொன்செய் கொல்ல னின் இடுக்கியின் இடையில் பொன்காசு அகப் பட்டிருக்கிறது என்று அப்புலவர் கூறியுள் ளார். இதிலிருந்து பொன்காசு உருண்டை வடிவமுள்ளதாக இருந்துவருகிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.

கொடுக்கல் வாங்கலும், வாணிகமும் எங்க ணும் பரந்து பெருகப்பெருக பொன்கட்டி நாணயங்கள் போதுமான அளவினதாக இல் லாமற்போகவே, நாணயங்களைப் பெருக்க பொன்கட்டிகளை எடை குறைக்கவேண்டியும், வேறுபல உலோகங்களை உடன்சேர்த்துக் கலப்பு நாணயங்களாகக் கொள்ளவேண்டியும் ஏற்பட்டன. அதனால் பொன்காசுகள் மாற் றுத் தாழ்ந்தனவாகவும், மதிப்புக் குறைந்தன வாகவும் ஆக நேரிட்டது. அப்படிப்பட்ட நிலையில், நாணயத்தின் எடை குறையாமலும், மாற்றுத் தாழாமலும் பார்த்துக்கொள்ளவேண் டிய பொறுப்பு, நாடாளும் அரசினைச் சார்ந்த தாயிற்று. அதனால் நாணயம் சரியானது என்பதை மக்களுக்குப் புலப்படுத்த, அரசினர் நாணயங்களைச் சரிபார்த்து, முத்திரையிட்டு வெளியிடவேண்டிய அவசியத்திற்கு உள்ளா யினர். முத்திரை இடுவதற்கு உருண்டை வடிவைவிடத் தகட்டு வடிவமே ஏற்றதாகக் காணப்பட்டதால், நாணயங்கள் நாளடைவில் தகட்டு வடிவம் கொள்ளத்தொடங்கின.

இவற்றை முத்திரை நாணயங்கள் என்று கூறலாம்.

பண்டைத் தமிழகத்தில் பண்டமாற்று, கட்டி நாணயம், முத்திரை நாணயம் ஆகிய மூவகை மதிப்பீடு முறைகளும் நடைமுறையில் இருந்தன என்று தெரியவருகின்றது. கழஞ்சு, மாடை போன்றன கட்டி நாணமாகவும். அக்கம், காணம், காசு, பொன் முதலியன முத்திரை நாணயமாகவும் வழங்கி வந்தன என்று எண்ண இடமிருக்கின்றது. இப்பொழுதும் எங்கணுமுள்ள நாட்டுப்புறச் சிற்றூர்களில் பண்டமாற்று முறை வழக்கத்தில் இருந்துவருவதைக் காணலாம்.

பண்டைத் தமிழகத்தில் பாணரும் புலவரும், கூத்தரும் பொருநரும் காணம், காசு, கழஞ்சு, பொன் ஆகியவற்றை ஆயிரக்கணக்கிலும் நூறாயிரக்கணக்கிலும் புரவலரிடத்திலிருந்து பெற்றனர் என்று சங்கச் செய்யுட்கள் கூறும் செய்திகளிலிருந்து அறியக்கிடப்பதால், அக்காலத்தில் பொன் நாணயம் வழக்கிலிருந்ததைத் தெரிந்துகொள்ளலாம்.

அக்காலங்களில் அரண்மனையைச் சார்ந்த பொற்கொல்லரே, காசுகள் செய்யும் பணியினை ஏற்றிருந்தனர். காசுகள் அடிக்கும் இடத்திற்கு அக்கசாலை என்றும், காசுகள் அடிக்கும் தட்டார்க்கு அக்கசாலையர் என்றும், அவர்கள் வாழ்ந்த தெருவிற்கு அக்கசாலைத்தெரு என்றும் வழங்கிவந்தனர். அக்கம் என்பது காசு என்னும் நாணயத்தில் பன்னிரண்டில் ஒரு பங்கு என்றும், காசு என்பது பதினான்கு குன்றிமணி எடையுள்ளதென்றும் சொல்லப்படுகின்றன.

பண்டைநாளில் வாழ்ந்த தமிழ்நாட்டு மூவேந்தர்களும் தனித்தனி நாணயங்களைத் தங்கள் தங்கள் பகுதியில் வழங்கிவிட்டனர். அவற்றில் அவரவரின் அடையாளச் சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. பாண்டியனுடைய நாணயம் சிலவற்றில் ஒரு மீனும், சிலவற்றில் இரண்டு மீன்களும், வேறு சிலவற்றில் மூன்று மீன்களும் பொறிக்கப்பட்டிருந்தன. மூவரசர்களின் காசுகளைச் சேரன் காசு, சோழன் காசு, பாண்டியன்காசு என்று பெயரிட்டு அழைத்துவந்தனர்.

அந்தக்காலங்களில் காசுகளின் அகமதிப்பாகிய உலோக மதிப்பும், அரசியலார் அவற்றிற்குக் கொடுத்த அரசியல் மதிப்பாகிய புறமதிப்பும் ஒத்திருந்ததினால், பிறநாட்டாரும் தமிழ் நாட்டுக் காசுகளை மதிக்கத் தயங்கியதில்லை; அவற்றை ஏற்றுக்கொள்ளவே செய்தனர்.

பொன் பல்வேறு பொருள்கள் செய்யவும், சிலைகள் வடிக்கவும், அணிகலன்கள் செய்யவும் பயன்படுத்தப்பட்டதாலும், பிறநாட்டார் அவ்வப்போது வந்து ஏராளமான பொன்னைக் கொள்ளையடித்துச் சென்றதாலும், பிறநாட்டுப் படையெடுப்பு, கொள்ளை ஆகியவற்றிற்கு அஞ்சி மக்கள் பொன் நாணயங்களைப் புதைக்க, அவ்வகையில் ஏராளமான காசுகள் புதையுண்டுபோனதாலும் நாணயங்களின் எண்ணிக்கை சிறுக்கத்தொடங்கிற்று; மேலும், பெருகிக்கொண்டிருக்கும் மக்கள் எண்ணிக்கைக்கு அவை போதுமானதாக இல்லை. இதனால் பொன் நாணயச் செலவாணி குறைந்து போயிற்று. இந்தக் குறைபாட்டைப் போக்க வெள்ளி, செப்பு நாணயங்கள் வழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டன. நாணயங்கள் பொன் நாணயம், வெள்ளி நாணயம், செப்பு நாணயம் என்று மூன்று தரமாகப் பகுக்கப்பட்டன. பொன் நாணயம் தலைத்தரமானதாகவும், வெள்ளி நாணயம் இடைத்தரமானதாகவும், செப்பு நாணயம் கடைத்தரமானதாகவும் கருதப்பட்டன. தங்க நாணயம் தலைமை நாணயமாகவும், வெள்ளி-செப்பு நாணயம் சில்லரை நாணயமாகவும் கொள்ளப்பட்டன. இந்த மூன்றுவகை நாணயங்களும் ஒரே எடையுள்ளனவாக இருந்ததாக ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள்.

காசு, பொன், கழஞ்சு, மாடை என்று பல தரமாக வழங்கிவந்த நாணயங்களுள் காசு ஒன்றுதான் இறுதியில் நின்றது என்றும் மற்ற நாணயங்கள் காலப்போக்கில் மறைந்தன என்றும் கூறுகிறார்கள். சங்ககாலத்திற்குப் பிற்பட்டுத் தோன்றிய நாணயங்கள் பெரும்பாலும் வெள்ளி, செப்பு ஆகிய உலோகங்களிலே செய்யப்பட்டன என்றாலும், அவையும், பொன் நாணயம்போன்றே காசு, கழஞ்சு, மாடை என்று அழைக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

மூவகைக் காசுகளும் 14 குன்றிமணியிலிருந்து 72 குன்றிமணி வரையில் எடையுள்ளனவாக இருந்ததாகக் கணக்கிடப்படுவதால், அவைகளில் பெருங்காசுகளும், சிறு காசுகளும்

இருந்தனவாக ஊகிக்கப்படுகின்றது. காசுகளின் எடை காலத்திற்குக் காலம், அவ்வக் காலத்தில், அந்தந்த உலோகங்களுக்கு ஏற்பட்ட மதிப்புக்கேற்றாற்போல் பெருகியும், குறுகியும் காணப்பட்டது.

நாட்டில் போர் முதலிய நெருக்கடி நிலைகள் ஏற்படும்போது, அரசன் பொற்காசுகளோடு சிறிதளவு செப்பையும் சேர்த்து அடித்து செலவாணியைப் பெருக்குவதுண்டு. சில வேளைகளில் பொற்கொல்லரும் திருட்டுத்தனமாகச் செப்பு உலோகத்தைப் பொற்காசுகளில் சேர்த்துவிடுவதுண்டு. இப்படிப்பட்ட கலப்படக் காசுகளை மக்கள் வாங்கும்போது, அவைகளிலுள்ள செப்புக்கு ஈடாக வட்டத்தைச் சேர்த்து வாங்கிக்கொள்வதுண்டு. இந்த வட்டக் காசுக்கு 'வாசி' என்று பெயர். தூய பொற்காசை 'நற்காசு' என்று வழங்கிவந்தனர்.

நற்காசுகளையும், கலப்புக் காசுகளையும் உரைத்துக் காண்பதற்கு 'கட்டளைக்கல்' என்னும் உரைகல்லையும், 'தண்டவாணி' என்ற உரையாணியையும் ஆங்காங்கு மக்கள் கொண்டிருந்தனர்.

அரசியல் அதிகாரிகளால் சரிபார்க்கப்பட்டது என்பதற்கு அறிகுறியாகவும், மாற்றும் நிறையும் சரியாக இருப்பதற்காகவும் வெள்ளி, பொன் நாணயங்கள் துளையிடப்பட்டும் இருந்தன. அத்தகைய நாணயத்தைத் 'துளைப் பொன்' என்று வழங்கினர். அதுபோலவே தூய வெள்ளி நாணயமும் துளையிடப்பட்டதுண்டு.

சங்ககாலத்திற்குப் பிற்பட்ட காலத்தில், அரசர்கள் தங்கள் நாணயங்களில் தங்கள் இயற்பெயரோடு, சிறப்புப்பெயர்களையும், வேறு பல சிறப்பு அடையாளங்களையும் பொறித்துக் கொண்டனர். "மதுராந்தகன்மாடை", "வீரபாண்டியன் காசு" என்பவை அவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகும். பழங்காசுகள் பழஞ்சோழன் காசு, பழம்பாண்டியன் காசு என வழங்கப்பட்டன. பேரரசர்களின் காசுகளில், அவரால் வெல்லப்பட்ட அரசர்களின் பெயர்களும் சேர்த்துப் பொறிக்கப்பட்டன. சில காசுகள் இருபுறமும் ஒரேவிதமாகவும், சில வேறுவேறுவிதமாகவும் குறிகள் கொண்டிருந்தன.

அக்காலத்தரசர்கள் காசடிப்பதற்கென்றே தனிவரியினை மக்களிடமிருந்து வசூலித்தார்கள். அப்படி வாங்கப்படும் வரிக்கு 'அடிகாசு பொன்வரி' என்றும் 'மாடைகூலி' என்றும் பெயர் வழங்கிவந்தது.

மூவேந்தர் காசுகள் முதலில் சதுரவடிவமாகவும், பின்னர் நீண்ட சதுரவடிவமாகவும், பின்னர் நாளடைவில் வட்டவடிவமாகவும் வடிவெடுத்தன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

ரோம் நாட்டோடு தமிழகத்தின் வாணிகம் மிகச் சிறந்தோங்கி வளர்ந்திருந்த காலத்தில், ரோம் நாட்டு நாணயங்கள் தமிழகத்தில் பெருவாரியாக வழங்கிவந்தன. கிரேக்க நாணயங்களும் தமிழகத்தில் செலவாணியுடையனவாக இருந்துவந்திருக்கின்றன. ஆங்காங்கு கண்டெடுக்கப்படும் புதையுண்ட நாணயங்களிலிருந்து இவ்வுண்மை தெளியப்படும்.

பல்லவர்கள் தமிழகத்தை ஆண்டுவந்த காலத்தில் காளை முத்திரையும், விளக்கு—சக்கரம் போன்ற குறிகளும் பொறிக்கப்பட்ட காசுகள் வழக்காற்றில் இருந்துவந்தன.

பன்றி முத்திரை பொறிக்கப்பட்ட காசுகள், சாளுக்கியர்கள் காலத்தில், தமிழகத்தில் செலவாணியுடையனவாக இருந்துவந்தன. பன்றி அல்லது வராக முத்திரை கொண்டதும், வராகன் என்று பெயர் பெற்றதும், 3½ ரூபாய் மதிப்புடையதுமான பொன் நாணயம் சாளுக்கியர்காலத்தில்தான் தமிழ்நாட்டில் புகுத்தப்பட்டது.

இப்படியாகத் தமிழகத்தை ஆண்ட பல்வேறு சிற்றரசர்களும், பேரரசர்களும் விதவிதமான காசுகளைக் கொண்டு ஆட்சி நடத்திவந்திருக்கின்றனர்.

'பணம்' என்ற வெள்ளிக் காசும், 'துட்டு' என்ற செப்புக்காசும் பிற்காலத்தில் வழக்கத்திற்கு வந்த காசுகளாகும்.

ஆங்கிலேயர் தமிழகத்தை வென்று, அடக்கி ஆளத்தொடங்கியதற்குப் பிறகு அவர்களது ரூபாய், அணு, பைசா நாணயங்கள் நடைமுறைக்கு வந்தன; பழைய நாணயங்கள் மறைந்துபோயின.

அண்மைக்காலம் வரையில் புதுக்கோட்டையில் 'அம்மன்காசு' நடைமுறையில் இருந்துவந்ததைப் பலர் அறிந்திருக்கக்கூடும்.

[இது பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் எழுதிய 'பண்டமாற்றும் காசும்' என்னும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு, தழுவி எழுதப்பட்ட கட்டுரையாகும்.]

வினாவும் விளக்கமும்

அடுத்து வரும் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் நேரிடையாகக் கலந்து கொள்ளுமா?

இப்படிப்பட்ட கேள்வியை முன்னேற்றக் கழகத் தோழர்கள் ஆர்வத்தோடு கேட்கிறார்கள்; அனுதாபிகள் வியப்போடு கேட்கிறார்கள்; மாற்றார்கள் வேதனையோடு கேட்கிறார்கள்; பொறாமைக்காரர்கள் பொச்செரிப்போடு கேட்கிறார்கள்; இடந்தேடிகள் நப்பாசையோடு கேட்கிறார்கள்; ஆளவந்தார்கள் அச்சத்தோடு கேட்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை அலட்சியப்படுத்துவதிலே பெருமையும் பூரிப்பும் கொண்டிருந்த பலரும், அதன் எதிர்கால நடவடிக்கை குறித்து அறிய இது நாளில் அக்கறை கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதுதான்.

அறிஞர் அண்ணா அவர்கள் சென்ற ஆண்டு சிறையிலிருந்து வெளிவந்தபோது, ஆளவந்த கட்சியைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக்கழகம் தேர்தலில் நின்று பார்க்கட்டுமே, அதனை முறியடித்துக் காட்டுவோம் என்ற முறையில், ஒருவர் மாற்றி மற்றொருவர் சவால் விட்டுக்கொண்டிருந்தனர். அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்கள், சில பொதுக்கூட்டங்களில் பேசும்போது, ஆளவந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு சவால் விட்டுக்கொண்டேயிருப்பார்களாயின், திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நின்று தீரவேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும், தேர்தலில் இறங்க விருப்பங்கொள்ளாத நிலையிலிருக்கும் கழகத்தைத் தேர்தலில் இறங்கும்படி மாற்றுக்கட்சியார் செய்துவிடுவார்களாயின், அது அவர்களுக்குத்தான் ஆபத்தாக முடியும் என்னும் கருத்துப்பட பேசினார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில், தொடர்ந்து வேறு பல பொதுக் கூட்டங்களில் பேசும்போது, தேர்தலில் நிற்க திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எல்லாவித தகுதியும் இருந்தும், அது நிற்கத் தயங்குவதற்குக் காரணம், பெரியார் இராமசாமி எதிர்த்து நின்று செயலாற்றக் கூடிய வேண்டப்படாத நிலை ஏற்படாமல், அவர் இசைவினையும் பெறக்கூடிய நல்ல சூழ்நிலை உறுதிப்படவேண்டும் என்பதை எதிர்பார்ப்பதேயாகும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அறிஞர் அண்ணாவின் நோக்கமெல்லாம் ஏற்ற நல்லதொரு தேர்தல் சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்பதேயாகும். ஆனால் தேர்தல் பற்றிய திட்டமான முடிவைத் திராவிட முன்னேற்றக்கழகப் பொதுக்குழுதான் முடிவுசெய்யும். அடுத்து நடைபெறப்போகும் பொதுத் தேர்தலுக்கு முன் கூடும் பொதுக்குழுக் கூட்டம், அப்போதைய சூழ்நிலையை ஒட்டி, ஏற்றதொரு முடிவை எடுக்கும். அதுவரை வினாவெழுப்புவோர் பொறுத்திருப்பார்களாக!

ஃ ஃ

திராவிடக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கி என்று அடிக்கடி கூறும் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் அவர்கள், திராவிடக் கழகத்தின் 'பிள்ளையாரை உடைத்தல்', 'பார்ப்பனரை வெட்டுதல்—விரட்டுதல்', 'அரசியல் அமைப்புச் சட்டத்தை நெருப்பிட்டுக் கொளுத்துதல்' போன்ற நடவடிக்கைகளை ஆதரிக்கவும், அவற்றில் கலந்துகொள்ளவும் மறுப்பதேன்? இரட்டைக்குழல் துப்பாக்கி என்ற கூற்று எவ்வாறு பொருந்துவதாகும்?

திராவிடக் கழகத்துக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் சிலபல கொள்கைகளில், குறிக்கோள்களில் ஒற்றுமையுண்டு என்பதை விளக்கிக்காட்டவே, பொதுச்செயலாளர் அவர்கள் 'இரட்டைக் குழல் துப்பாக்கி' என்ற உவமையைக் காட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் பங்கு கொண்டு பணியாற்றிவரும் பெரும்பாலோர், திராவிடக் கழகத்தில் இருக்கும்போது எந்தெந்த கொள்கைகளையும், திட்டங்களையும் ஆதரித்து ஏற்றுக் கொண்டிருந்தார்களோ, அந்தக் கொள்கைகள்

—திட்டங்களைப் பொறுத்து இன்றும் 'இரட்டைக்குழல் துப்பாக்கி'யாகவே கருத விரும்புகிறார்கள் என்று பொருள். திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்ததற்குப் பிறகு, திராவிடக் கழகத்தார் ஏற்படுத்திக்கொண்டிருக்கும், பல கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தார் தங்களை உடன்பாடு படுத்திக்கொள்வதில்லை; அப்படிப்பட்ட கொள்கைகள்—திட்டங்களைப் பொறுத்துத் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடக் கழகத்தோடு 'இரட்டைக்குழல் துப்பாக்கி'யாக ஒப்புவமைபடுத்திக்கொள்வதில்லை.

உடன்பட்டுவரும் கொள்கை—திட்டம் அளவுக்காவது திராவிடக்கழகத்தோடு திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கக்கூடாதா என்று கேட்கத் தோன்றக்கூடும். திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடக் கழகத்தோடு உடன்பட்டுவரும் கொள்கை—திட்டங்களில் ஒத்துழைக்க முழுவிருப்பம் உண்டு என்றாலும், அந்த நிலையை வெறுத்தொதுக்குவது திராவிடக் கழகந்தான். தி. மு. க. கூட்டங்களுக்குப் போவதும், தி. மு. கவினரோடு சேர்ந்து பணியாற்றுவதும், தி. மு. க. கொடியின் கீழ் நின்று பேசுவதும் குற்றமாகும் என்று தீர்மானம் நிறைவேற்றி வைத்திருப்பது திராவிடக் கழகந்தான். எனவேதான் தி. மு. க. முயன்றாலும் ஒத்துழைப்பது முடியாததொரு செயலாக இருந்துவருகிறது.

ஃ ஃ ஃ

அறிஞர் அண்ணா அவர்கள் 'கம்ப இராமாயணம்' என்னும் பொருள்பற்றி யாருடன் எந்த ஆண்டில் சொற்போர் நடத்தினார்கள்? முடிவு என்ன?

1943-ஆம் ஆண்டில் சென்னை, சேலம் ஆகிய இரண்டு இடங்களிலும் சொற்போர் நடத்தினார்கள்.

சென்னையில், 9-2-43-ல், சென்னைச் சட்டக் கல்லூரி மண்டபத்தில், சட்டக்கல்லூரித் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் முதல் சொற்போர்க்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டத்திற்குத் தோழர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் தலைமைதாங்கினார்கள். தோழர் ஆர். பி. சேதுப்பிள்ளை அறிஞர் அண்ணாவோடு சொற்போர் நடத்தினார். தோழர் சேதுப்பிள்ளை அவர்கள் பத்து நிமிடத்தில் தம்முடைய பேச்சை முடித்துக்கொண்டு, உடல்நலமில்லை என்று கூறிவிட்டு, பிறிதொரு முறை காஞ்சிபுரத்திற்கு வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். தலைவர் எந்த முடிவும் கூறாமல் முடிவுரையை முடித்துக்கொண்டார்.

இரண்டாவது சொற்போர்க் கூட்டம் 14-3-43-ல், சேலத்தில், செவ்வாய்ப்பேட்டைத் தேவாங்கபாடசாலை மண்டபத்தில் பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டத்திற்கு அப்பொழுது சேலம் கல்லூரித் தலைவராகத் திகழ்ந்த தோழர் ஏ. இராமசாமி அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

அறிஞர் அண்ணாவோடு சொற்போராட பேராசிரியர் எஸ். சோமசுந்தர பாரதியார் வந்திருந்தார். பாரதியார் சிறிது நேரம் தம்மைப் பற்றியும், இராமாயணத்தைப்பற்றியும் பேசிவிட்டுப், புகைவண்டிக்கு நேரமாகிவிட்டது என்று சொல்லிவிட்டு, அறிஞர் அண்ணாவின் இறுதி மறுப்புரையைக் கேட்காமலே போய்விட்டார்.

தலைவர் அவர்கள் தமது முடிவுரையில் அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

இந்த இரண்டு சொற்போர்க் கூட்டங்களிலும் அறிஞர் அண்ணாவுக்கு ஏற்பட்ட வெற்றிதான் பழம் புராணப் பண்டிதர்களின் கொட்டத்தைப் பெருமளவுக்கு அடக்கிற்று என்னலாம்.

ஃ ஃ ஃ

தமிழகத்தில் பரப்பப்படும் திராவிடநாடு பிரிவினை கோரிக்கை ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய பகுதிகளில் பரப்பப்பட்டுள்ளதா? பரப்பப்படவேண்டாமா? அங்கெல்லாம் பரப்பப்படாமல் திராவிடநாடு பிரிவினை அவ்வளவு எளிதாக இயலுவதொரு செயலாகுமா?

திராவிடம் தனி நாடாக ஆக்கப்படவேண்டும் என்ற உணர்ச்சி, தமிழகத்தில் ஊட்டப்பட்டுள்ள அளவுக்கு, ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய பகுதிகளில் ஊட்டப்படவில்லை என்பது உண்மைதான். அதற்குக் காரணம் கொள்கையினிடத்தே உள்ள குற்றமல்ல, அந்தக் கொள்கையைப் பரப்புவதற்கான முறைகளிலே உள்ள வசதிக்குறைவுதான். திராவிட முன்னேற்றக்கழகம் தன்னுடைய கொள்கையைத் தமிழகத்தில் பரப்புவதற்கான வசதிகளையும், வாய்ப்புகளையும் இப்பொழுதுதான் சிறுகச் சிறுகப் பெற்றுவருகிறது. மற்றப் பகுதிகளில் பரப்புவதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்த சிறிது சிறிதாக முயன்றுவருகிறது.

சித்தூர்த்திராவிடமுன்னேற்றக் கழகத்தோழர்களின் மூலமாக ஆந்திராவிலும், பெங்களூர் தி. மு. கழகத் தோழர்களின் மூலமாகக் கருநாடகத்திலும், நாஞ்சில்—பாலக்காடு தி. மு. கழகத் தோழர்களின் மூலமாகக் கேரளத்திலும் கொள்கையைப பரப்புவதற்கான வழி வகைகள் ஆராயப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவை இயன்ற அளவுக்குச் சிறிது நாளில் செயலாற்றலுக்குக் கொண்டுவரப்படும்.

ஆந்திரரும், கன்னடத்தாரும், மலையாளிகளும் திராவிடநாடு பிரிவினைக் கொள்கையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள், எனவேதான் அங்கெல்லாம் கழகம் வேரூன்றவில்லை என்று சிலர் தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். முன்னேற்றக்கழகத்தார், இன்னமும் தங்கள் கொள்கையை ஏந்திக்கொண்டு சென்று அவர்களை யெல்லாம் காணவில்லை என்பதுதான் அங்கெல்லாம் பரவாததற்குக் காரணமேயொழிய, கழகக் கொள்கையை அவர்களெல்லாம் கேட்டறிந்து வெறுத்துவிட்டார்கள் என்பதல்ல. ஆந்திரரும், கன்னடியரும், மலையாளிகளும் மொழிவழி மாநில அமைப்பிலும், மொழிவழி ஆதிக்க ஆட்சியிலும் முழுக்க முழுக்க கவனம் செலுத்தியிருப்பதால், தனித் திராவிடக் கூட்டாட்சி அமைப்புப் பிரச்சினை அவ்வளவு எளிதாக அவர்கள் செவிகளில் ஏறாது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான், அந்த மொழிவழிப் பிரச்சினைகள் தீரும் காலத்தை மிக விரைவில் எதிர்பார்த்துக்கொண்டும், அதுவரையில் தமிழகத்தில் கழகத்தை வலுப்படுத்திக்கொண்டும் முன்னேற்றக் கழகத்தார் செயலாற்றி வருகிறார்கள். தனித் திராவிடக் கூட்டாட்சி அமைப்பு பற்றி விளக்கம் கொடுக்கக் கொடுக்க எப்படித் தமிழகம் சிறிது சிறிதுதாக அதனை ஏற்றுக்கொள்ள முன்வந்திருக்கிறதோ, அதுபோலவே ஆந்திரமும், கருநாடகமும், கேரளமும் சிறிது சிறிதாக ஏற்றுக்கொள்ள முன்வரும் என்ற உறுதிப்பாடு முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு.

திராவிட நாடு பிரிவினை கோரிக்கை திராவிடப் பகுதிகள் நான்கிலும் பரப்பப்படத்தான் வேண்டும்; அது வேண்டாமென்று கூறுவாரில்லை; அதற்கான வாய்ப்பையும் வசதியையும், காலத்தையும் கருவியையும் எதிர்பார்த்துக் கொண்டுதான், திராவிட முன்னேற்றக் கழகம் தன்னால் இயன்ற அளவுக்குச் செயலாற்றி வருகிறது.

தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை வளர்க்கப்பட்டிருப்பதைப்போலவே, ஏனைய பகுதிகளிலும் வளர்க்கப்பட்டே தீரவேண்டும் என்னும் அவசியம் ஒருக்கால் ஏற்படாமற் போனாலும்போகக்கூடும். தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகியநான்கும் மொழிவழி நான்கு மாநிலங்களாகப் பிரிந்து, முன்னேற்றக் கழகக் கொள்கை தமிழகத்தின் ஆட்சிபீடத்தில் ஏறத்தொடங்குமேயானால், பின்னர் மற்றைய மூன்று மாநிலங்களின் ஆட்சிப்பீடங்களையும் தன் கருத்துக்கு ஒட்டி வரும்படி செய்வது, தமிழகத்துக்கு அவ்வளவு கடினமானதொரு செயலாகாது. திராவிடப்பகுதிகள்நான்கும் இந்திய யூனியன் ஆட்சியின் கீழ் அமைந்திருப்பதைவிட, தாமே தனிக்கூட்டாட்சி ஒன்று அமைத்துக்கொள்வது எல்லாவகையிலும் நன்மை பயக்கக்கூடியதாகும் என்பது தெளிவாக்கப் படும்போது, அந்த நான்கு பகுதிகளும் இணங்கி வருவது என்பது அவ்வளவு கடினமானவொரு செயலாகாது. திராவிடப் பகுதிகளின் ஆட்சிப்பீடத் தலைவர்களும், அவர்கள் சார்ந்த ஆளுங் கட்சியினரும் தனித் திராவிடக் கூட்டாட்சித் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முனைந்துவிடுவார்களேயானால், திராவிடம் தனியாகப் பிரிவது எளிதாகவே முடியும். மக்களின் போராட்டக் கிளர்ச்சிகளின் ஒருமனதான கோரிக்கையின் காரணமாக என்றல்லாமல், ஜனாப் ஜின்னாவின் பேச்சு வார்த்தை எப்படிப் பாகிஸ்தானைத் தனியே பிரிக்கமுடிந்ததோ, அதுபோலவே திராவிடப்பகுதிகள் நான்கின் ஆட்சிபீடத் தலைவர்கள் ஒன்றுகூடிப் பேசி, ஒரு முடிவுக்கு வருவதன் மூலமும் தனித் திராவிடக் கூட்டாட்சியைப் பெற்றுவிடவும் முடியும். இது இயலாததொன்று என்று எவரும் கூறிவிடமுடியாது.

திராவிடப் பகுதிகள் நான்கும் இந்திய யூனியன் ஆட்சியில் அடங்கியிருப்பதைவிட, பிரிந்துபோகும் சுய நிர்ணய உரிமையோடுகூடிய தனித் திராவிடக் கூட்டாட்சியின் கீழ் அமைவது, தங்களுக்கு எல்லாவகையிலும் ஏற்புடைத்தாகும் என்பதை, அண்மையில் அவை உணர்ந்தே தீரும். திராவிட முன்னேற்றக் கழகம் முன்னேறிச் செல்ல, காலமும் கருவியும் எதிர்கொண்டுவர தனித் திராவிடநாடு கோரிக்கை வெற்றியுறும் என்பது உறுதி.



தையற்கலை

கே. பி. சுந்தரம், G.C.T.

இலகுவான (ப்ராக்) கவுன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

12, 10, 3, 5, 7, 9, 12 எண்கள் வரை. முன் பக்கம் இணைப்புகள்.

கீழ்ப்பக்கம் (ஸ்கர்ட்) பாவாடையின் விளக்கம்

13-ல் இருந்து 0 வரை $17\frac{1}{2}$ அங்.
(ஸ்கர்ட் முழுநீளம் + $2\frac{1}{2}$ அங். இடுப்பு வரை முதுகுநீளம் குறைவு.)
14-ல் இருந்து 0 வரை $1\frac{1}{2}$ அங்.
15-ல் இருந்து 14 வரை 5 அங்.
16-ல் இருந்து 14 வரை 10 ,,
A-ல் இருந்து 0 வரை 14 ,,
(A-க்கும் 17-க்கும் இணைக்கவும்)
17-ல் இருந்து A வரை $17\frac{1}{2}$ அங்.
(13-க்கும் 0-க்கும் உள்ள அளவு)
18-ல் இருந்து 17 வரை 2 அங்.
(18-க்கும் 16-க்கும் இணைக்கவும்.)
19-ல் இருந்து 18 வரை 7 அங்.
(18, 19, 13 எண்கள் வரை (பாட்டம்) கீழ்ப்பக்கம் இணைக்கவும்.)

15-க்கு கீழ்ப்பக்கம் $\frac{1}{2}$ அங் வளைவு படத்தில் உள்ளபடி வரையவும்.

19-க்கு கீழ்ப்பக்கம் $\frac{1}{2}$ அங். வளைவு படத்தில் உள்ளபடி வரையவும்.

14, 15, 16 எண்கள் உள்ள இடத்தில் மடிப்புகள் அமைத்து மேல் படியில் 1, 9 எண்கள் உள்ள இடத்தில் இணைத்துத் தைக்கவும்.

14, 15, 16, 18, 19, 13, 14 எண்கள் வரை கீழ்ப்பக்கம் பாவாடையின் இணைப்புகள்.

கையின் விளக்கம்

1-ல் இருந்து 0 வரை $6\frac{1}{2}$ அங்.
(கை நீளம் + 2 அங். தோள்பக்கம் மடிப்புக்காக)
2-ல் இருந்து 0 வரை 5 அங்.
($\frac{1}{8}$ மார்பளவு + 2 அங்)
3-ல் இருந்து 2 வரை $5\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் $\frac{1}{2}$ அங். குறைவு 3-க்கும் 0-க்கும் சாய்வு கோடு வரையவும்.)
4-ல் இருந்து 1 வரை 5 அங்.
(முன்னங்கை சுற்று அளவு + $1\frac{1}{2}$ அங். மடிப்புக்காக)
5-ல் இருந்து 0 வரை 2 அங்.
6-ல் இருந்து 3 வரை 2 ,,
7-ல் இருந்து 6 வரை $\frac{1}{2}$ அங்.
8-ல் இருந்து 5 வரை $\frac{3}{4}$,,

1, 4, 3, 7, 8, 0 வரை படத்தில் உள்ளபடி கை வரையவும். சிறு கவுன், இதற்கு கை கவார்தட்டு எடுக்காமலும் தைக்கலாம்.

(லே அவுட்) வெட்டியபிறகு, கவுன் துண்டுகள்.

1, 2 எண்கள் (ஸ்கர்ட்) 3 எண், மேல் பாடி முன்பக்கம். 4 எண், மேல்பாடி பின்பக்கம். 5, 6 எண்கள் கைகள். 3 எண்ணுள்ள முன்பக்கத்துண்டில் திறப்பு (ஓப்பன்) அமைக்கவும்.

விளக்கப்படத்தின் வடிவம்போல் அமைந்து இருக்கிறதாவென்று ஒத்திட்டுப்பார்த்து வெட்டத்தொடங்கவும்.

(சென்ற இதழ் விளக்கப்படத்தைப் பார்க்கவும்)

'தையற்கலை' வெல்க!

(பாரதிதாசன்)

வையகத்தில் நெய்யும் உடையெலாம்
தையல் திறத்தால் தகுதியடையும்.

* * *

இயற்கையில் அழகலார் எனினும் அவர்க்
[கேலாம்
செயற்கை அழகு செயும் தையற் தொழில்
தையல் அருந்தொழில் தழையத் தழைய
உய்யும் தமிழர்பால் உயர்வு தழையும்!

தமிழ்நாடு எங்கும் வெற்றிப் புன்னகையோடு
காட்சியளிக்கும் கண்கொள்ளாக் கா...

சென்னை பாரகன் - கிரௌன் - உமா தியேட்டர்களில்
24 - 9 - 54 முதல் வெற்றியோட்டம்

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,